30 JUN 1998


# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 13 வள்ளுவர் ஆண்டு2029 ஆனி 16 செவ்வாய்க்கிழமை (30-06-1998) UTHAYAN – A Lively National Tamil Daily கதிர்:183


# யாழ். புதிய மேயர் நேற்று பதவியேற்பு!

## பலத்த பாதுகாப்புக்கு மத்தியில்

யாழ்ப்பாணம், ஜூன் 30

யாழ்ப்பாண மாநகர சபையின் புதிய மேயராக கூட்டணிப் பிரமுகர் சட்டத்தரணி பொன் சிவபாலன் நேற்று பதவியேற்றார்.

அவரது பதவியேற்பு நிகழ்வும் தொடர்ந்து யாழ். மாநகர சபையின் மாதாந்தக் கூட்டமும் நேற்று பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் இடம் பெற்றன,

இந்நிகழ்வுகளை ஒட்டி யாழ்ப்பாண மாநகரசபை அலுவலகம் அமைந்துள்ள நல்லூர் இந்து விடுதிப் பகுதியில நேற்றுக்காலைமுதலே பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் படையினரால் செய்யப் பட்டிருந்தன.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ். மேயரும், ஏனைய மாநகர சபை உறுப்பினர்களும், கூட்டணிப் பிரமுகர்களும் தங்கியிருந்த— யாழ். ஸ்ரான்லி வீதி ஒழுங்கையில் உள்ள—கூட்டணிக் காரியாலயத்துக்கும் படையினர் பலத்த பாதுகாப்பு வழங்கியுள்ளனர்.

மேயரும், ஏனைய கூட்டணி உறுப்பினர்களும்யாழ். மாநகரசபைக் கூட்டத்துக்கு புறப்பட்டு வாகனத்தில்வந்த போதும் அவர்களுக்கு படை

(10 ஆம் பக்கம் பார்க்க)

# வீரத்துடன் போராடுபவர்களையும் அன்புடன் அணைத்துச் செல்வோம்!

## புதிய மேயரின் கன்னிப் பேச்சு

யாழ்ப்பாணம், ஜூன் 30

''தியாகத்துடனும் வீரத்துடனும் போராடுபவர்களை அன்பாகக் கொண்டு—

சமாதானம், நீதி ஆகியவற்றுக்கு சவாலாக இல்லாமல்—

மக்களின் நிம்மதிக்கான பாதையில் எமது வழி அமையட்டும்''

யாழ். மாநகர சபையின் புதிய மேயராகப் பதவியேற்றசட்டத்தரணி பொன். சிவபாலன், பதவியேற்றபின்னர் மாநகரசபைக் கூட்டத்திற்குத்தலைமை வகித்து கன்னியுரை நிகழ்த்தியபோது இவ்வாறு கூறினார்.

தொடர்ந்து வரும் துன்பங்களையும், தொடரப்போகும் துன்பங்களையும் நாம் அறிந்துள்ளோம்; எனவே எமது சந்ததியின் தேவையை இந்தக் காலகட்டத்தில் பூர்த்தி செய்ய வேண்டிய கடப்பாடு

(10 ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பில் நேற்றிரவு பெருமெடுப்பில் தேடுதல்!

## ஏராளமானோர் கைது!!


கொழும்பு, ஜூன் 30

கொழும்பு நகரில் தமிழர்கள் பெருமளவில் வசிக்கும் செட்டியார் தெரு, ஜிந்துப்பிட்டி மற்றும் அவற்றை அண்டிய பகுதிகள் நேற்றிரவு பொலீஸாராலும், படையினராலும் பெரும் எடுப்பில் சுற்றிவளைக்கப்பட்டன.

இப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் பெரும் எண்ணிக்கையில் கைதுசெய்யப்பட்டு பல பஸ்களில் ஏற்றப்பட்டு வேறு இடம் ஒன்றுக்குக் கொண்டு செல்லப்பட்டதாக நேற்றிரவு பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

கைதானவர்கள் 10 பஸ்களில் ஏற்றப்பட்டு கொண்டு செல்லப்பட்டதாக ஒரு செய்தி தெரிவித்தது.

இந்தப் பாரிய தேடுதல் நடவடிக்கை இன்றுஅதிகாலை இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது. (ஐ-9-164)



புதிய மேயர் பொன். சிவபாலன் தமிழர் விடுதலைக் கூட்டணியின் துணைத்தலைவர் வீ. ஆனந்தசங்கரி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து பதவியேற்கிறார். அருகில் யாழ். மாநகர ஆணையாளர் வி. பி. பாலசிங்கமும் புதிய மேயரின் துணைவியார் திருமதி சிவபாலனும் காணப்படுகின்றனர். (ஐ)

(படம்: சிட்டு)

### நேற்று அதிகாலை முதல்

# புலிகளின் நிலைகள் மீது கிழக்கில் தாக்குதல்!

மட்டக்களப்பு, ஜூன் 30

மட்டக்களப்பில் கொக்கட்டிச்சோலை, திக்கோடை, சாந்திமலை ஆகிய இடங்களில் உள்ள புலிகளின் முகாம்கள் மீது நேற்று அதிகாலை முதல் தாக்குதல் நடவடிக்கை ஒன்றை படையினர் ஆரம்பித்திருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்கள் அறிவித்தன.

உயிரிழந்த ஏழு புலிகளில் ஐவரின் சடலங்களையும், 11 ஆயுதங்களையும், பெருமளவு தோட்டாக்கள், ஆறு மோட்டார் சைக்கிள்கள், டிராக்டர் ஒன்று, பெருமளவு பொலீஸ் சீருடைகள், மருந்துப் பொருள்கள் ஆகியவற்றையும் தாங்கள் கைப்பற்றியதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

மட்டக்களப்பு மாவட்டம் வாகரைப் பிரதேசத்தில் படை நடவடிக்கைகளை மேற்கொண்டு அப்பிரதேசத்தைக் கைப்பற்றிய படைகள், தமது நடவடிக்கைகளை முடித்துக்கொண்டு திரும்பிவிட்டதாக ஒரு செய்தி தெரிவித்தது. (உ-21)

# வரணியில் கிரனேட் வீச்சு

யாழ்ப்பாணம், ஜூன் 30

கடந்த ஞாயிறன்று பிற்பகலில் தென்மராட்சி வரணி தெற்கில் காவலில் இருந்த படையினர் மீது விடுதலைப் புலிகள் கிரனேட் வீச்சுத்தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படுகிறது. இத்தாக்குதலில் காயமுற்ற இரு சிப்பாய்கள் சிகிச்சைக்காகப் பலாலி தள வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். (ஐ-உ)

# ஜனாதிபதியின் மகளை கொலை செய்யச் சதி?

கொழும்பு, ஜூன் 30

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவின் புதல்வி யசோதரா குமாரதுங்கவை தற்கொலைத் தாக்குதல் பாணியில் படுகொலை செய்யத் திட்டப்பட்ட சதித்திட்டம் அம்பலமாகியிருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த சதித்திட்டத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப் பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த அந்த நபர் ஜனாதிபதியின் மகள் பயணம் செய்த காருடன் மோத எத்தனித்த சமயம் கைது செய்யப்பட்டார்.

அச்சமயம் அவரது உடலிலோ அல்லது மோட்டார் சைக்கிளிலோ குண்டு எதுவும் பொருத்தப்பட்டிருக்கவில்லை என்று பொலீஸார் தெரிவித்தனர் தற்கொலைப் பாணியிலான தாக்குதல் ஒன்றை நடத்தும்ஒத்திகையில் ஈடுபட்டபோதே அவர் கைது செய்யப்பட்டதாக விசாரணை மூலம் தெரியவந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

### செம்மணியில் அதிகாலை

# படையினரின் சூட்டுக்கு இனந்தெரியாதவர் பலி!

யாழ்ப்பாணம், ஜூன் 30

செம்மணிப் பகுதியில் நேற்று அதிகாலை 2-15 மணியளவில் படையினரின் சூட்டுக்கு இலக்காகி ஒருவர் உயிரிழந்தார். இனந்தெரியாத அந்த நபரின் சடலம் பொலீஸாரால் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

அப்பகுதியில் சந்தேகத்துக்கு இடமான அசைவுகளை அவதானித்த படையினர் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர் என்றும்—

(10 ஆம் பக்கம் பார்க்க)

# நிவாரண வெட்டை ஆட்சேபித்து நகரில் நேற்று கண்டனப் பேரணி!

யாழ்ப்பாணம், ஜூன் 30

யாழ்.மாவட்டத்தில் இடம் பெயர்ந்தவர்களுக்கான உலர் உணவு நிவாரணம் பெற்று வரும் குடும்பங்களில் சுமார் 34 ஆயிரம் குடும்பங்களின் நிவாரண விநியோகத்தை நிறுத்துவது என்ற அரசின் முடிவை ஆட்சேபித்து யாழ். நகரில் நேற்றுக் கண்டனப் பேரணி ஒன்று நடத்தப்பட்டது.

மனித நீதிக்கான போராட்டக் குழுவால் ஏற்பாடு செய்யப்பட்ட அப்பேரணியில் நூற்றுக்கணக் கானோர் கலந்து கொண்டனர்.

முற்பகல் 10. 30 மணியளவில் யாழ். நக்கா வீதி-கோவில் வீதிச் சந்தியில் இருந்து பேரணி ஆரம்பித்தது,

பேரணியில் கலந்துகொண்டோர் நிவாரண வெட்டை ஆட்சேபிக்கும் கோஷங்களை எழுப்பியவாறு சுலோக அட்டைகளைச் சுமந்துகொண்டு ஊர்வலமாகச் சென்றனர்.

முற்பகல் 11. 30 மணியளவில் பேரணி யாழ். செயலகத்தை அடைந்தது. ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கவுக்கு விலாசமிடப்பட்ட மகஜர் யாழ். பிரதேச செயலர் பா:

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணுவில் சிவகாமி அம்மன் கோயில்

## பாலஸ்தாபன கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

நிகழும் வெகுதானிய வருடம் ஆனிமாதம் 17ஆம் திகதி (1-7-98) புதன்கிழமை காலை 6.00 மணி 57நிமிடம் முதல் 7,00 மணி 25நிமிடம் வரையுள்ள கடக லக்கின ஆனிஉத்தர நன்முகூர்த்தத்தில் சிவகாமி அம்பாளுக்கும் பரிவாரமூர்த்திகளுக்கும் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நடைபெறும்.

கிரியா நிகழ்ச்சிகள் 29- 6- 98 முதல் ஆரம்பமாகியுள்ளன.

-- மகாகும்பாபிஷேக திருப்பணிச் சபை.

(57243)

உ

மங்களகரமான

## பேக்கவுஸ் திறப்பு விழா

வெகுதானிய வருடம் ஆனி மாதம் 17ஆம் நாள் [01-07-98] நாளை புதன்கிழமை காலை 7.38 மணி முதல் 9.14 மணி (பழைய நேரம்) வரையும் உள்ள சுபவேளையில்,

## "காங்கேயன் பேக்கவுஸ்"

எனும் நிறுவனத்தை
(பங்களா லேன் அருகில்)
யாழ். வீதி,
மல்லாகம்

எனும் முகவரியில் ஆரம்பிக்க உள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம். நண்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள், அனைவரையும் இச் சுப வேளையில் பங்கு கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

கி. பரமகுருநாதன்
(குரு)

(57235)

A/L 2000
உயிரியல்
ஆரம்பம்:- 1/7 Wed, 5p.m.
Mr. S. திவாகரன் B Sc.
★ PHY. Mr. ஸ்பெல்மன்
★ CHE. Mr. மகேஸ்வரன்
★ O/L, Yr.10, 9 & 8

**SHAMROCK**

(சி/4141)

**NEW SCIENCE COLLEGE**
Kannathiddy Road,
Jaffna.

99 A/L
PHYSICS
HEAT
Mr. சம்பந்தன்

ஆரம்பம்:- 30-06-98
Tue. 3.30 p m.
Tue., Thur. 3-30p,m.

(57241)

உ
ஈஸ்வரி அம்பாள் துணை

## தேவை

ஆயுள்வேத வைத்திய களஞ்சிய நிலையத்துக்கு உதவியாளர் தேவை. விசேட அடையாள அட்டையின் போட்டோபிரதியுடன் எவரும் விண்ணப்பிக்கலாம்.

இல. 752,
மே./பா. உதயன்
யாழ்ப்பாணம்.

(சி/4140)

## திருமறைக் கலாமன்றம்

சைவ சித்தாந்த ஆய்வு வட்டம்
நடத்தும்

## கருத்தரங்கு

பொருள்:- "திருவுந்தியார் காட்டும் வாழ்க்கை நெறி"

காலம்:- 30-6-98 இன்று செவ்வாய்க்கிழமை
நேரம்:- பிற்பகல் 5.00 மணி
இடம்:- மன்ற கேட்போர் கூடம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

-- திருமறைக் கலாமன்றம்

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/4142)

தென்மராட்சி வரவேற்கிறது-!

## பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழக நிதிக்காக

செல்லையா மெற்றாஸ்மயில்
தயாரிப்பு நெறியாள்கையில்

## வேழம்படுத்த வீராங்கனை

(ஆட்ட நாட்டுக்கூத்து)

இடம்: சாவகச்சேரி இந்துக்கல்லூரி மண்டபம்
காலம்: 4-7-98 சனிக்கிழமை
மு. ப. 10-12 மணி, பி. ப. 2-4 மணி
இருகாட்சிகள் - மாணவர்களுக்கு மட்டும்
5-7-98 ஞாயிற்றுக்கிழமை
மு. ப. 10-12 மணி, பி. ப. 2-4 மணி
இருகாட்சிகள்

பெரியவர்களுக்கு 50/-
மாணவர்களுக்கு 20/-

= பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழகம்

(57245)

## கண்ணீர் அஞ்சலி

எமது நண்பன்
நா. லோகேஸ்வரன்
அவர்களின் அன்புத் தந்தையார்

### கணபதி நாகலிங்கம்

அவர்கள் இறைபதம் அடைந்ததையிட்டு துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

- நண்பர்கள்,
(யாழ். வைத்தீஸ்வராக கல்லூரி மாணவர்கள் 98)

(57249)

## ஆழ்ந்த அஞ்சலி

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் உறுப்பினர்
லயன் வீ. எஸ். துரைராஜா
அவர்களின் தந்தையார்
அமரர்

### வினாசித்தம்பி சுந்தரம்

அவர்களின் பிரிவினால் துயருறும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தலைவர்-உறுப்பினர்,
லயன்ஸ் கழகம்,
சாவகச்சேரி.

(57244)

## கண்ணீர் அஞ்சலி

ஊர்காவற்றுறை பிரதேச சபை செயலாளர்
கு. கணேசலிங்கம்
அவர்களின் அன்புத் தாயார்

### குருசாமி நாகம்மா அம்மையார்

காலமானதையிட்டு துயருறும் அன்னாரின் பிள்ளைகளின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஊர்காவற்றுறை வர்த்தகர் சங்கம்

(57242)

## லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி.
இன்று மட்டும்
ரமேஸ் அரவிந்,
சரத்குமார், ஹீரா
**வசந்த காலப் பறவைகள்**
புதன், வியாழன்
ராஜேந்தர் - மைதிலி
**மைதிலி என்னை காதலி**
நேரம்:- 10-30, 2-30
(பழைய நேரம்)
Tele. No: 070 - 212223

(57176)

## ராஜா டாக்கீஸ்

யாழ்ப்பாணம்.
3 ஆவது வெற்றிவாரமாக
ரஜனி - நக்மா
ரகுவரன், ஜனகராஜ்
நடித்த
**பாட்ஷா**
தினசரி
10-30 — 2-00, 5-00
(புதிய நேரம்)

(சி/3917)

## நாகம்ஸ் சினிமா

சுன்னாகம்.
அகல வெண் திரையில்
30-06-98 செவ்வாய்
ரஜனி-நதியா-ராதா
நடித்த
ராஜாதிராஜா
(C. D. வெளியீடு)
காட்சிகள்:- 10-30, 2-30
அடுத்த வெளியீடு
எம் ஜி. ஆர்.
ஜெயலலிதா நடித்த
ரகசிய பொலிஸ் 115
CD வெளியீடு

(57240)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி ஜெயரூபி நாதன்

கோண்டாவில் கிழக்கில் வசித்தவரும், வயாவிளான் மத்திய மகா வித்தியாலய ஆசிரியருமான நாதன் அவர்களின் அருமைத் துணைவியார் ஜெயரூபி 29-6-98 திங்கட்கிழமை அன்று அகால மரணம் அடைந்தார்.

இவர் காலஞ்சென்ற நல்லையா —இராசம் தம்பதிகளின் அன்பு மருமகளும், உரும்பிராயைச் சேர்ந்த ஜெயரட்ணம் (பிரபல வர்த்தகர், உரும்பிராய்), காலஞ்சென்ற புவனேஸ்வரி தம்பதிகளின் அருமைப் புதல்வியும், ஜெய்கரன், இந்துஜா, நதியா ஆகியோரின் அருமைத் தாயாரும், காலஞ்சென்ற ஜெயக்குமார் மற்றும் கனடாவில் உள்ள ஜெயக்கொடி, ஜெயரூபன், ஜெயமுகுந்தன், ஜெயலதா ஆகியோரின் சகோதரியும், திருமதி இராஜரட்ணம், ஞானேஸ்வரி (கனடா), சிறீமோகன் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30-6-98) செவ்வாய்க்கிழமை பி. ப. 1.00 மணியளவில் கோண்டாவில் கிழக்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோண்டாவில் இந்துமயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந. நாதன்
(கணவன்)

கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

(57247)

### கணபதி நாகலிங்கம்

கோண்டாவில் வடக்கைச் சேர்ந்த கணபதி நாகலிங்கம் 29. 06. 98 அன்று காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதி, வள்ளி ஆகியோரின் அன்பு மகனும், பார்வதியின் அன்புக் கணவரும் ரவீந்திரன், காலஞ்சென்ற சிறிதரன் மற்றும் தயாளன் (பல்கலைக்கழக ஊழியர்), மகேஸ்வரன், சுமதி, லதா, லோகேஸ்வரன், அருட்செல்வி ஆகியோரின் அன்புத்தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள்இன்று(30.06.98)செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் அவரதுஇல்லத்தில்நடைபெற்று பூதவுடல் காரைக்கால் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
லோகேஸ்வரன்
மகேஸ்வரன்
(மக்கள்)
(வைத்தீஸ்வராக் கல்லூரி A/L மாணவர்கள் 1996, 98)

கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

(57246)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பி.ஜே.பி.கவிழ்ந்தால் ஆட்சிக்கு வரும் எந்தக் கட்சிக்கும் ஆதரவு இல்லை!



## சோனியா அறிவிப்பு

பெங்களூர், ஜூன் 30

''மத்தியில் பாரதீய ஜனதா அரசு கவிழ்ந்தால் ஆட்சிக்கு வரும் எந்தக் கட்சிக்கும் காங்கிரஸ் ஆதரவு வழங்காது''

இவ்வாறு காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்தி தென் இந்திய மாநிலமான கர்நாடகத்தில் தெரிவித்தார்.

பாரதீய ஜனதா அரசைக் கவிழ்த்து விட்டு மத்தியில் புதிய அரசை அமைக்கக் காங்கிரஸ் முன்வரா விட்டால் தாம் அரசு ஒன்றை அமைப்பதற்குக் காங்கிரஸ் ஆதரவு வழங்க வேண்டும் என்று சமீபத்தில் உருவாக்கப்பட்ட தேசிய ஜனநாயக முன்னணி கோரிக்கை விடுத்திருந்தது.

இந்த முன்னணியின் கோரிக்கைக்குப் பதில் அளிக்கும் விதத்திலேயே சோனியா காந்தி மேற்கண்ட கருத்தை வெளியிட்டார்.

மத்தியில் பாரதீய ஜனதா அரசு கவிழ்ந்தால் தக்க தருணத்தில் காங்கிரஸ் கட்சி முன் முயற்சியை மேற்கொள்ளும் என்றும்—

தேசிய ஜனநாயக முன்னணியுடன் காங்கிரஸ் ஒரு போதும் சேராது என்றும் சோனியா காந்தி கூறினார்.

முலாயம்சிங் யாதவ் தலைமையிலான சமாஜவாதி கட்சியும்—

லாலுபிரசாத்யாதவ் தலைமையிலான ராஸ்டிரியஜனதாதள் கட்சியும் சமீபத்தில் ஒன்றிணைந்துதேசிய ஜனநாயக முன்னணியை உருவாக்கியது தெரிந்ததே.

பாரதீய ஜனதா அரசுக்கு எதிராக ஒன்று சேரும் படிமதசார்பற்றசக்திகளுக்கு இந்த முன்னணி சமீபத்தில் அழைப்பு விடுத்திருந்தது.

(இ-ரி)

## கொசொவோவில் நேட்டோ தலையிடும்

வாஷிங்டன், ஜூன் 30

யூகோஸ்லாவிய சமஷ்டிக் குடியரசைச் சேர்ந்த கொசொவோவில் நேட்டோ படைகள் தலையிடுவதற்காக திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

எனினும் இதுவரை எந்த முடிவும் மேற்கொள்ளப்படவில்லை என்று மூத்த அமெரிக்க அதிகாரி தாமுவேல் சான் பிடேசன்ஸ் தெரிவித்தார்.

கொசொவோவின் இப்போதைய நிலை மிக ஆபத்தானது. அது கொசொவோ மாகாணத்தின் பிறதன்மைகளுக்கு ஊறு விளைவிப்பதாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதே வேளை கொசொவோவில் ஐ. நாவின் ஒப்புதல் இல்லாமல் எத்தகைய நேட்டோ இராணுவ நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டால் அது அபாயகரமான விளைவினை ஏற்படுத்தும் என ஐ. நா. பொதுச் செயலாளர் கோபி அனான் தெரிவித்துள்ளார்.

(இ-ரி)

## அரபாத் குற்றச்சாட்டு

ஹெப்ரோன், ஜூன் 30

''மத்திய கிழக்கு அமைதி முயற்சியில் புதிய சர்வதேச கூட்டமைப்பை ஏற்படுத்த இஸ்ரேல் பிரதமர் பென்ஜமின் நத்தன்யாகு விடுத்த அழைப்பு அமைதி ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காகவே''

மேற்கண்டவாறு பலஸ்தீன அதிபர் யஸிர் அரபாத் தெரிவித்துள்ளார்.

மேலும் இதன் மூலம் இஸ்ரேல் பிரதமர் அமைதி ஒப்பந்தத்தின் அடித்தளத்தையே மாற்ற முயற்சிக்கின்றார் என்றும் அரபாத் கூறினார்.

வெள்ளை மாளிகையில் அதிபர் பில்கிளின்ரனின் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட ஆசிய ஒப்பந்தங்களை நாம் பாதுகாக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-ரீ)

## சட்டப் பேரவையைக் கலைப்பதில் சிக்கல்

### சிதம்பரம் கூறும் காரணம்

சென்னை, ஜூன் 30

''தமிழக அரசைக் கலைப்பது எளிது. ஆனால் சட்டப் பேரவையைக் கலைப்பதில் சட்டச் சிக்கல் உள்ளது.''

இப்படி முன்னாள் நிதியமைச்சர் ப. சிதம்பரம் கூறினார்.

இதை பா. ஜ. க. உணர்ந்துள்ளது. ஆனால் அ. தி. மு. கவுக்கு அக் கட்சியால் உணர்த்த முடியவில்லை என்றார் சிதம்பரம்.

அவர் மேலும் கூறியதாவது

தி.மு.க. அரசைக் கலைக்க வேண்டும் என்று நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக அ. தி. மு. க. சொல்லி வருகிறது.

அவர்களைப் பொறுத்தவரை இது, ஒரு அம்சத்திட்டம், இதற்காக எல்லா விதமான சாம, பேத, தான, தண்டங்களைக் கையாள அவர்கள் தயார். இதற்கு பா. ஜ. க அரசு பலியாகுமா இல்லையா என்பது தான் கேள்வி.

டில்லியில் பா. ஜ. க. தலைவர்கள் ஒன்றைப் புரிந்து வைத்துள்ளார்கள். அரசைக் கலைப்பது எளிது. ஆனால்சட்டப்பேரவையைக் கலைக்க முடியாது. சட்டப் பேரவையைக் கலைத்தால் உடனடியாக நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்.

மக்களவையில் தீர்மானம் நிறைவேறுமா என்பதே கேள்விக்குறி. மாநிலங்களவையில் நிச்சயமாகத் தீர்மானம் நிறைவேற்ற முடியாது. அப்படியென்றால், மீண்டும் சட்டப் பேரவைக்கு உயிர் வந்துவிடும். மீண்டும் உயிர் வந்தால் கருணாநிதியை முதல்வராகச் சட்டப் பேரவை தேர்ந்தெடுக்கும். இதை பா. ஜ. க. உணர்ந்திருக்கிறது. அதை அ. தி. மு. க வுக்கு அக் கட்சியால் உணர்த்த முடியவில்லை. இது தான் சிக்கல்.

பா. ஜ. க. ஏதோ நெறி முறைகளுக்கு உட்பட்ட கட்சி என்பதை நான் ஏற்கத் தயாராக இல்லை. சட்டப்பேரவையைக் கலைத்து அதை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற முடியும் என்றால் அதை அக்கட்சி செய்துவிடும். சட்டம் தடையாக இருப்பதால் யோசிக்கிறது.

இப்படி அவர் கூறினார்.

## தமிழ் மாநில காங்கிரஸ் - காங்கிரஸ் இணைப்பு சோனியாவின் கையில்

### மூப்பனார் சொல்கிறார்

சென்னை, ஜூன் 30

காங்கிரஸ் – தமிழ் மாநில காங்கிரஸ் ஒருங்கிணைப்பு குறித்து இனி முடிவுஅறிவிக்க வேண்டியது அகில இந்திய காங்கிரஸ் தலைவி சோனியா காந்திதான்.

இப்படி த.மா.கா. தலைவர் ஜி. கே. மூப்பனார் தெரிவித்தார்.

காங்கிரஸுடன் ஒருங்கிணைந்து செயல்பட விருப்பம் தெரிவித்துள்ளோம்.

இனி அகில இந்திய காங்கிரஸ் தலைமைதான் இது பற்றிக் கூறவேண்டும். இது தொடர்பாக சோனியாவிடம் நான் ஏதும் பேசவில்லை, காங்கிரஸ் ஏதும் கூறாத நிலையில் நாங்கள் ஏன் அவசரப்படவேண்டும்?

உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஆங்காங்கே நடைபெறும்இடைத்தேர்தல்களில் த. மா. கா வின் மாநிலத் தலைமை தலையிடவில்லை. அந்தந்த மாவட்டத் தலைமைகளே பார்த்துக் கொள்ளட்டும் என்று சொல்லி விட்டோம்.

மக்களவைக்கு மீண்டும் தேர்தல் வருவதை எவரும் விரும்பவில்லை. தேர்தல் வரக்கூடாது என்று நான் நினைக்கின்றேன் என்றார் மூப்பனார்.

(இ)

## இந்திய வெளியுறவுச் செயலர் பங்களாதேஷ் விஜயம்

டாக்கா, ஜூன் 30

இந்திய வெளியுறவுச் செயலர் கே. ரகுநாத் இரண்டு நாள் உத்தியோக பூர்வ பயணமாக நேற்று பங்களாதேஷ் போய்ச் சேர்ந்தார்.

இவர் பங்களாதேஷ் வெளியுறவுச் செயலர் முஸ்தாப் இசுரஃமான், மற்றும் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவார் என்றும்—

பேச்சுவார்த்தையின் போது இருதரப்பு விடயங்கள், எல்லைக்கு அப்பாலுள்ள ஊடுருவல்கள் மற்றும் அல்பா தலைவர் அனு செட்டியாவை விசாரணைக்காக இந்தியா அனுப்புவது தொடர்பான விடயங்கள் ஆராயப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(இ)

## தென் ஆபிரிக்காவுக்கு பிரான்ஸ் ஆதரவு

பிரேசில், ஜூன் 30

ஐ. நா. பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்பு நாடாக தென் ஆபிரிக்காவை சேர்த்துக்கொள்ளும் முயற்சிகளுக்கு பிரான்ஸ் ஆதரவு அளிக்கும் என பிரெஞ்சு அதிபர் ஜாக்சிராக் அறிவித்துள்ளார்.

தென் ஆபிரிக்காவை ஐ. நா. பாதுகாப்புச்சபையில் நிரந்தர உறுப்பு நாடாக்குவதற்கான தகுதிகள் ஏற்கனவே இருக்கின்றன எனவும் அவர் தெரிவித்தார்.

(இ-ரி)

## திமோரில் குழுக்கள் மோதல்

டில்லி, ஜூன் 30

கிழக்கு திமோரில் இந்தோனேசிய ஆட்சிக்கு எதிராகவும், ஆதரவாகவும் ஆர்ப்பாட்டம் நடத்தும் போட்டிக் குழுக்களுக்கு இடையே மோதல்கள் இடம்பெற்றுள்ளன. மோதலில் ஒருவர் பலியானதாக முதலில் வந்த செய்திகள் கூறின.

தலைநகரில்ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைக்கப் பொலீஸார்கண்ணீர்ப்புகைப் பிரயோகம்செய்தனர். (ஐ)

## தமிழகத்தில் எய்ட்ஸ் அதிகரிப்பு

சென்னை, ஜூன் 30

எய்ட்ஸ் நோய் ஒழிப்பில் தமிழ் நாடு முன்னிலையில் இருந்தாலும் எய்ட்ஸ் பரவுவது அதிகரித்து வருகிறது என்று தமிழ்நாடு நல்வாழ்வுத்துறை அமைச்சர் ஆர்க்காடு வீராசாமி தெரிவித்தார்.

எய்ட்ஸ் பற்றிய விழிப்புணர்வு நகர்ப் புறங்களில் 96 சத வீதமும், கிராமப் புறங்களில் 91 சதவீதமும் உயர்ந்துள்ளது. இருப்பினும் நோய்த் தடுப்பில் தீவிரம் தேவை.

எய்ட்ஸ் அச்சமுள்ளவர்களுக்கு ஆலோசனை வழங்க தொண்டு நிறுவனங்களின் உதவி பெறப்பட்டுள்ளது.

இதற்காக 200 தொண்டு நிறுவனங்களுக்கு ரூ. 5.42 கோடியை அரசு வழங்கி உள்ளது.

கடந்த ஆண்டு உலகில் 58 லட்சம் பேர் எய்ட்ஸால் பாதிக்கப்பட்டனர். தினசரி 16 ஆயிரம் பேர் இந்நோய்க்கு ஆளாகின்றனர்.

இப்படி அவர் கூறினார்.

(இ)

## இஸ்ரேல்-இந்திய வர்த்தக உறவில் முன்னேற்றம்

டெல்அவிவ், ஜூன் 30

இந்திய அணுகுண்டு வெடிப்புச் சோதனைகளின் பின் அமெரிக்கா விதித்த பொருளாதாரத் தடையை அடுத்து தற்போது இஸ்ரேலிய—இந்திய வர்த்தக உறவு முன்னேற்றம் கண்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இஸ்ரேலிய திறந்த சந்தைப் பொருளாதாரத்தில் இந்தியா மிகப்பெரிய பங்காளியாக விளங்கும் என இஸ்ரேல் கருதுகிறது.

தெற்காசியாவின் பெரிய வர்த்தக சந்தை அமைப்பான சீனாவில் வாஷிங்டன் தன்னை இணைத்துள்ளத [illegible] போட்டிபோட முடியாமல் இருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்திய — இஸ்ரேலிய வாஷிங்டனின் அரசியல் கொள்கையில் சிக்காதநாடாகவும் —

அமெரிக்காவின் பொருளாதார உதவியை அண்டி வாழாத நாடாகவும் —

வெளியுறவுக் கொள்கைகளில் தன்னிசையாக செயற்படும் நாடாகவும்— தன்னை வெளியுலகுக்கு காட்ட இஸ்ரேல் முயன்று வருகின்றது.

இந்தியா போன்ற அணிசேரா முன்னணி நாடுகளுடன் நல்லுறவை மேற்கொள்வதன் மூலம் இஸ்ரேல் ஒரு சுயசார்பு பொருளாதார நாடு என உலக அரங்கில் தன்னைக் காட்டிக் கொள்வதற்கு இது ஒரு நல்ல சந்தர்ப்பம் என்று தெரிவிக்கப்படுகிறது.

வர்த்தக உறவு இரு நாடுகளுக்குமே நன்மை பயக்கும். தற்போது 50 கோடி டொலரைஎட்டியுள்ளவாணிபம் இந்த வருட இறுதியில் 100 கோடி டொலரைஎட்டும் என இரு நாடுகளின் வர்த்தக அமைச்சுகளும் நம்பிக்கை தெரிவிக்கின்றன.

இந்தியாவில் வேகமாக மாறி வரும் பொருளாதார அரசியல் சூழ்நிலையில் இஸ்ரேலுடனான பொருளாதார கூட்டு ஒப்பந்தங்கள் இந்தியாவிற்கு மிக முக்கியமான நன்மைகளைக்கொடுக்கும்.

வெகுகாலத்துக்கு நீடிக்கக் கூடிய இந்த உறவின் பலன்கள் ஒத்துழைப்பையும் நல்ல தோழமையையும் வளர்க்க உதவும் என்று தெரிவிக்கப்படுகிறது.

## மத்தியஸ்தம் வகிக்க முபாரக் தயார்

கெய்ரோ, ஜூன் 30

எதியோப்பியா — எரித்திரியா ஆகிய நாடுகளுக்கிடையிலான எல்லைப் பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான மத்தியஸ்தத்தை எகிப்தினால் மேற்கொள்ள முடியும் என எகிப்திய அதிபர் ஹொஸ்னி முபாரக் அறிவித்துள்ளார்.

(இ-ரி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

ஆபிரிக்க லவ்பேட்ஸ் மஞ்சள், சொண்டு சிவப்பு நிறமுடையவை கூட்டுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 20, பேரின்பநாயகம் ஒழுங்கை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

[57215]

### O/L கணிதம் 98

கணித பாடத்தின் பெரும் பிரிவுகளான அட்சர கணிதம், கேத்திர கணிதம், எண் கணிதம், புதிய கணிதம் ஆகியவற்றின் சகல அலகுகளையும் 33 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் ஆரம்ப அறிவிலிருந்து 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும். க. ஆறுமுகநாதன், 10, கச்சேரி, கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி [57189]

## திருமலையில் ஆடைத் தொழிற்சாலை

திருகோணமலை, ஜூன் 30

திருகோணமலையில் ஆடைத் தொழிற்சாலை ஒன்று இன்று திறந்து வைக்கப்படவிருக்கிறது.

பல லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இந்தத் தொழிற்சாலையை கைத்தொழில் அமைச்சர் சி. வி. குணரத்தின திறந்து வைக்கவிருக்கிறார்.

இந்த வைபவத்தில் தபால் தொலைத்தொடர்பு பிரதி அமைச்சர் எம். எல். எம். ஹிஸ்புல்லா, திருமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் ஆகியோர் பங்குபற்றுவர்.

(இ-3)

## உடற்கல்வி விரிவுரையாளர்

வலி. தென்மேற்கு ஜூன் 30

யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி விரிவுரையாளர் பதவிக்கு சிறப்புப் பட்டதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்கும் பட்டதாரிகள் பட்டத்துடன் துறைசார் நிபுணத்துவம் பெற்றவர்களாக இருக்க வேண்டுமென விளையாட்டுத்துறை அதிகாரி தெரிவித்தார்.

இதேவேளை உடற்கல்வி டிப்ளோமா கற்கை நெறிக்கு மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான எழுத்துப் பரீட்சை எதிர்வரும் 11ஆம் திகதி காலை பத்து மணிக்கு இராமநாதன் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.

(இ-185-9)

## விளையாட்டு உபகரணங்கள் இன்னும் இல்லை

வலி. வடக்கு, ஜூன் 30

உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள விளையாட்டுக் கழகங்களுக்கு 1997 ஆம் ஆண்டுக்கான விளையாட்டு உபகரணங்கள் இன்னும் வழங்கப்படவில்லை.

இந்த ஆண்டுக்கான விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் போது விளையாட்டு உபகரணங்கள் விநியோகம் செய்யப்படுமென விளையாட்டுக் கழகங்களுக்கு கூறப்பட்டது.

ஆனால் விளையாட்டுப் போட்டிகள் முடிவடைந்த பின்பும் விளையாட்டு உபகரணங்கள் இன்னும் விநியோகிக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது.

(இ-86)

---

மல்லாகம் சாளம்பை முருக மூர்த்தி ஆலயம்

## அலங்கார உற்சவம்

ஆரம்பம்: 01 - 07 - 98 புதன்கிழமை
தீர்த்தம்: 11 - 07 - 98 சனிக்கிழமை
பூங்காவனம்: 12 - 07 98 ஞாயிற்றுக்கிழமை
அபிஷேகம் தினமும் மு.ப 11.00 மணிக்கு ஆரம்பமாகும்
சுவாமி வீதிஉலா மாலை 5.30 மணிக்கு
சமயச்சொற்பொழிவு: சிவத்திரு. வ. குமாரசாமிஐயா அவர்கள்

இந்து இளைஞர் தொண்டர்சபை,
ஆலயபரிபாலனசபை.

கோடைக்காடு,
மல்லாகம். (57222)

---

## நெஞ்சை விட்டு அகலாத 3 ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 29 — 10 — 1929



உதிர்வு 30 — 06 — 1995

அமரர்

### குருகுலம் ஏபிரகாம்லிங்கன்

(இளைப்பாறிய ஆசிரியர், யாழ். மத்திய கல்லூரி)

எங்கள் அன்புத் தெய்வமே!

எத்தனை ஆண்டுகள் மறைந்தாலும் உங்கள் நினைவுகள் எங்கள் நெஞ்சை விட்டகலா. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்!
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

27/1, 3-ம் குறுக்குத் தெரு,
பாஷையூர், யாழ்ப்பாணம். (57161)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்

### இரத்தினம் மனோகரன்

மண்மகிழ 07-07-1944
கண்நெகிழ 31-05-1998

அன்புத் தெய்வமே! பாசமிகு தந்தையே!
பண்பின் உறைவிடமே! நாமிருக்க எங்கு சென்றீர்!
ஆதரிக்க ஆயிரம் உறவுண்டு - ஆனாலும்
அப்பா என்று நான் யாரை அழைப்பேன்?
திங்கள் ஒன்று சென்றதையா - ஆனால்
எம் கவலை நீங்கவில்லை.
ஆண்டு பல சென்றாலும் ஆறுமோ எமது துயர்?

பாசத்தின் வலையில்
அன்பு மனைவி, மகள், மருமகன்.

கவிஸ்ரன்,
தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி. (57229)

---

## உடற்கல்வி பயிற்சி முகாம்

இடம்: சம்பத்திரிசியார் கல்லூரி
நேரம்: காலை 8-30 -பி.ப 5-00 மணிவரை
திகதிகள்: 4 ஆம், 5 ஆம் திகதிகள்
மாதம்: ஆடி 98

நோக்கம்:
எதிர்வரும் 11ஆம் திகதி பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ள டிப்ளோமா உடற்கல்வி பயிற்சியாளர்கள் தெரிவுக்கான முன்னோடிப் பயிற்சி வகுப்புக்கள் / விரிவுரைகள் / கேள்வி பதில்கள்,

விரிவுரையாளர்கள்:
ஒவ்வொரு துறையிலும் திறமையும், ஆற்றலும் வெகுகால அனுபவங்களும் கொண்டவர்கள்.

பயிற்சிக் கட்டணம்: ரூபா 100

குறிப்பு: இரு நாள்களும் காலை / மாலை தேநீர் வழங்கப்படும்— மதிய போசனம் உங்களுடன். மதிய போசன இடைவேளை பி. ப, 12 30— பி. ப. 2-00

விண்ணப்ப முடிவு திகதி:
02 - 07 - 1998 பி. ப- 4-00 மணி

பொறுப்பாளர் விலாசத்தில்
கட்டணம் சட்ட வேண்டியது; 04 - 07 - 1998
காலை 8 - 15 மணிக்கு

மேலதிக தொடர்புகள் இல்லை.

பயிற்சி முகாம் பொறுப்பாளரும்,
பிரதம விரிவுரையாளரும்
ம. டேவிட் தம்பிராஜா
டிப்ளோமா உடற்கல்வி (லண்டன்)
டிப்ளோமா சர்வதேச உதைபந்தாட்டப்பயிற்சியாளர்
ஜேர்மனி (அரசாங்க புலமைப் பரிசில்)
விளையாட்டு அமைச்சு, முன்னாள் விளையாட்டு உத்தியோகத்தரும்,
திருமலை/யாழ். மாவட்ட உதைபந்தாட்டப் பயிற்சியாளரும்.

22/11, பாரதி லேன்,
சுண்டுக்குளி. (57231)

---

## வாழ்த்துகின்றோம்

யா/ கரணவாய் தாமோதர வித்தியாலயம்



மேற்படி பாடசாலை மாணவன்

### தருமகுலசிங்கம் ஜெயந்தன்

சைவபரிபாலன சபையினரின் 1997 ஆம் ஆண்டுக்கான சைவ நெறித்தேர்வில் ஆண்டு இரண்டில் யாழ். மாவட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்று தங்கப் பதக்கம் பெற்றதையும் அவரை நெறிப்படுத்திய அதிபர் ஆசிரியர்களையும் வாழ்த்துகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர்
(57223)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 22 — 03 — 1932



மறைவு 11 — 07 — 1997

திருமதி

### சின்னராசா கனகம்மா

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

மானிப்பாய் வீதி,
ஆனைக்கோட்டை. (57232)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களுத்துறை கைதிகளின் விவகாரம்; கூட்டணி வழக்கு தாக்கல் செய்யும்?

கொழும்பு, ஜூன் 30

களுத்துறை சிறையில் விசாரணைகள் எதுவுமின்றி நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் பிரச்சினைகள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கக்கோரி நீதிமன்றில் வழக்குஒன்றை தாக்கல் செய்வதற்கு தமிழர் விடுதலைக் கூட்டணி பரிசீலனை செய்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நீண்டகாலமாக இந்தக் கைதிகள் விசாரணைகள் எதுவுமின்றித் தடுத்து வைக்கப் பட்டுள்ளதை அடுத்து இந்தக் கைதிகள் உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தி வருகின்றனர்.

இது தொடர்பாகத் தான் ஜனாதிபதிக்கும், நீதி அமைச்சர் ஜீ. எல். பீரிஸுக்கும் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளதாகவும் —


இவ்வாறு நீண்ட காலம் விசாரணைகள் எதுவுமின்றி தடுத்து வைக்கப்படும் செயல் மனித உரிமை மீறல் செயலாகும் எனவும் —

எனவே மனித உரிமை மீறல் வழக்கு ஒன்றினைத் தாக்கல் செய்வதற்குத் தாம் பரிசீலித்து வருவதாகவும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் எம். சிவசிதம்பரம் தெரிவித்துள்ளார்.

(இ-10-9)

ஓம் ஸ்ரீ மீனாட்சி அம்மன் துணை

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் கந்தையா சிவசம்பு

(சம்பு மெக்கானிக்)

மலர்வு 18 – 03 – 1938　　உதிர்வு 31 – 05 – 1998

எமது குடும்ப பாசதீபம் இறைவியின் பாதாரவிந்தங்களிற் பிரகாசிக்கவென எமைவிட்டுப் பிரிந்து இன்று 31ஆம் நாள், (30–06–98). இத்தினத்தில் எமது தலைவனின் ஆத்ம சாந்திக்காக மீனாட்சி அம்மனின் பாதமலர்களைப் பணிந்து பிரார்த்திக்கின்றோம்.

''ஆசைக்கடலில் அகப்பட்ட அருளற்ற
அந்தகன்கைப்
பாசத்தில் அல்லற்படவிருந்தேனை நின்பாதமென்னும்
வாசக்கமலம் என்தலைமேல் வலியவைத்தாண்டு
கொண்ட
நேசத்தை என்சொல்வேன் ஈசர்பாதத்துநேரிழையே''
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

= குடும்பத்தினர்.

கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

(57208)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 15 – 09 – 1962　　உதிர்வு 22 – 06 – 1996

திருமதி

### கெங்காதேவி தேவராசா

திதி; 30 - 06 - 98

ஆண்டு இரண்டாய் ஆறாத் துயரில்
எமை ஆழ்த்தி விட்டு
ஆழ்ந்த துயில் கொள்ளும் - எம்
அன்புச் செல்வமே!
ஆண்டு இரண்டென்ன
ஈராயிரம் சென்றாலும்
ஆறாது எம் துயரம்மா.

உம் பிரிவால் வாடும்:
கணவன், அம்மா,
அண்ணா, அண்ணி,
அக்காமார், அத்தான்மார்,
பெறாமக்கள், மருமகள்.

2½ஆம் குறுக்குத்தெரு,
சாவகச்சேரி.

(57187)

## கோழிகளுக்கு புதுவித நோய்

செம்பியன்பற்று, ஜூன் 30

வடமராட்சி கிழக்கு மாமுனை, செம்பியன்பற்று, வத்திராயன், மணல்காடு பகுதிகளில் கோழிகளுக்கு புதுவகையான நோய் ஒன்று பரவி வருகின்றது.

முதலில் கோழிகளின் கண் தெரியாமல் வந்து பின்னர் சுழன்று விழுந்து இறக்கின்றன. இப் பகுதியில் உள்ள கோழிகளுக்கு நோய்த்தடுப்பு ஊசி போடப்படுவதில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. (இ-36-9)

## 2 மீனவர்கள் கரை திரும்பவில்லை

திருகோணமலை, ஜூன் 30

திருகோணமலைக் கடலில் மீன் பிடிக்கச் சென்ற இரு மீனவர்களை கடந்த ஒரு வார காலமாகக் காணவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

திருகோணமலை 10 ஆம் குறிச்சியைச் சேர்ந்த இரு மீனவர்கள் கடந்த 23 ஆம் திகதி மீன் பிடிக்கச் சென்றனர் என்றும் —

நேற்றுவரை அவர்கள் கரை சேரவில்லை என்றும் — தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

## கல்விக் கண்காட்சி

நல்லூர், ஜூன் 30

நாளையும், நாளை மறுதினமும் யாழ். திருக்குடும்ப கன்னியர்மடம் மகா வித்தியாலயத்தில் கல்விக் கண்காட்சி ஒன்று நடைபெற உள்ளது.

இதில் பிரதம விருந்தினர்களாக யாழ். ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம், அருட்சகோதரி வில்பிரட் ஆகியோர் கலந்து கொள்ள உள்ளனர். (இ-103-9)

## மின் இணைப்பு வேலைகள் தாமதம்

கொக்குவில் தொழில்நுட்பக்கல்லூரியில் மின்சார இணைப்பு வேலைகள் இதுவரை பூர்த்தி ஆகாததால் யு. என். டி பி. அமைப்பினால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட 60 கே. வி. வலுவுள்ள ஜெனரேற்றரைப் பாவிக்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

# செய்திக் கொத்து

## லயன்ஸ் உதவி

கொழும்புத்துறை, ஜூன் 30

யாழ்ப்பாணம் லயன்ஸ் கழகத்தினரால் அண்மையில் பச்சிலைப்பள்ளி பலநோக்கு கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் வைத்து கண்பரிசோதனை, சிறுநீர் பரிசோதனை என்பன மேற்கொள்ளப்பட்டன. கண்ணில் குறைபாடு உள்ளவர்களுக்கு இலவச மூக்குக்கண்ணாடியும்வழங்கப்பட்டது. (இ – 30 –9)

## சைக்கிள் திருடன் பொலீசாரிடம்

சுன்னாகம், ஜூன் 30

சுன்னாகம் பகுதியில் பல சைக்கிள் திருட்டுக்களில் ஈடுபட்டதாகக் கூறப்படும் நபர் ஒருவர் பிடிபட்டார்.

அண்மையில் இச்சம்பவம் இடம்பெற்றது.

சில நாள்களுக்கு முன்னர் ஒரு வீட்டின் வாசலில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிளை மேற்படி நபர் திருடிச் சென்றதாகவும் —

இவர் மீது சந்தேகம் கொண்ட சைக்கிள் உரிமையாளர் இவரை சுன்னாகம் பொலீஸில் ஒப்படைத்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(இ - 27)

## செயற்பாட்டு அறிக்கை சமர்ப்பிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 30

யாழ். மாவட்டத்திலுள்ள ஏழு பிரதேச சபைகளிலும் அமுல்படுத்தப்பட்டுவரும் கிணறுகளுக்கு குளோரின் போடும் திட்டம் குறித்து இருவாரத்துக்கு ஒருதடவை செயற்பாட்டு முன்னேற்ற அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என மேற்படி சபைகளின் செயலாளர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஊடாக வடக்கு — கிழக்கு உள்ளூராட்சி ஆணையாளருக்கு இந்தச் செயற்பாட்டு முன்னேற்ற அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. (இ-5–9)

## சுகவாழ்வுப் பயிற்சி

வலி. தென்மேற்கு, ஜூன் 30

யாழ். சுகவாழ்வு நிலையத்தில் குழந்தைகளுக்கான சுகவாழ்வுப் பயிற்சி நடைபெற்றது.

இதில் யாழ். பல்கலைக் கழக மருத்துவ பீட மாணவர்கள், குழந்தைகளின் ஆளுமை வளர்ச்சியை தூண்டக் கூடிய விளையாட்டுச் செய்கையை செய்து காட்டினர்.

இந்நிகழ்வில் சுகவாழ்வு இயக்குநர் வண. ஜூசை டேமியன் கலந்துகொண்டு சிறப்பித்தார். (இ-185-9)

## சிறுவர்களுக்கு வங்கிக் கணக்கு

வலி. தென்மேற்கு, ஜூன் 30

இலங்கை மக்கள் வங்கிக்கிளைகளில் சிறுவர் வைப்புக் கணக்கு ஒன்று ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

மாதமொன்றுக்கு 100 ரூபா முதல் 1000 ரூபா வரையில் சேமிப்பில் இடலாம்.

இக் கணக்கின் காலம் 5 வருடங்களாகும். விரும்பினால் 5 வருடக் கட்டணத்தையும் ஒரே தடவையில் வைப்புச் செய்ய முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-185–9)

## மருந்துக்கடை உடைத்து திருட்டு

சுதுமலை, ஜூன் 30

சென்ற வாரம் மானிப்பாய்ப் பகுதியில் மருந்துக் கடை ஒன்று உடைக்கப்பட்டு அங்கிருந்த பெறுமதிமிக்க மருந்துப் பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

கடையின் பின்பக்க கதவு உடைக்கப்பட்டு நள்ளிரவு பொருள்கள் திருடப்பட்டதாக கடை உரிமையாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை திருடப்பட்ட மருந்துப் பொருள்கள் விற்பனைக்காக வெளியில் வந்த போது விற்க வந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

(இ–139-9)

## திறப்பு விழா

சண்டிலிப்பாய், ஜூன் 30

யாழ். சமூக அபிவிருத்தி மன்றத்தின் ஆதரவில் நடத்தப்படும் நீர்வேலி வடக்கு பகவான் முன்பள்ளி கட்டட திறப்பு விழாவும், பாலர் கலை விழாவும் அண்மையில் சிறப்பாகநடை பெற்றன.

வலி. கிழக்குதெள்பகுதி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் அ.க.த. கிருஷ்ணராசா இதில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு கட்டடத்தை திறந்துவைத்தார்.

சமூக அபிவிருத்தி மன்ற இணைப்பதிகாரி திருமதி ருக்மணி ஆனந்தவேல் இதில் கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்டார்.

(ஐ-135)

## ஆபத்துக் காலப்படி கிடைக்கவில்லை

கொழும்புத்துறை, ஜூன் 30

வட பிராந்திய போக்குவரத்துச்சபை ஊழியர்களுக்கு இதுவரை ஆபத்துக் காலப்படி வழங்கப்படவில்லை.

இப்பகுதி ஊழியர்கள் பல தடவைகள் கொழும்புத் தலைமைச் செயலகத்துடன் நேரிலும், கடித மூலமும் தொடர்பு கொண்டும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

(ஐ-30)

## ரூ. 5 ஆயிரம் கொடுப்பனவு

சுதுமலை, ஜூன் 30

சண்டிலிப்பாய் பிரதேச சபையின் கீழ் உள்ள ஆனைக்கோட்டை, மானிப்பாய், சுதுமலை ஆகிய கிராம சேவையாளர் பிரிவில் 5000 ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகின்றது. தற்போது 200 குடும்பங்களுக்கு இந்தக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

(இ–159–9)

## நிறைவு விழா

கொழும்புத்துறை, ஜூன் 30

யாழ். மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையின் 162 ஆம் ஆண்டு நிறைவு விழாவும், பரிசளிப்பு வைபவமும் சபாரத்தினம் கலையரங்கில் பாடசாலை அதிபர் திருமதி ச. யோகேஸ்வரன் தலைமையில் அண்மையில் நடைபெற்றன.

(இ–30-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்

## சின்னத்தம்பி அப்புத்துரை

(தெல்லிப்பழை)

தோற்றம் 21 - 07 - 1921

மறைவு 11 - 07 - 1997

திதி: 1998 - 06 - 30

தங்கள் ஆத்ம சாந்திக்காக என்றும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாசமிகு
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,

K. K. S வீதி,
இலங்கை வங்கி அருகில்,
சுன்னாகம்.

(57197)

# மாகாணசபைத் தேர்தலை நடத்த தீர்மானித்தது ஏன்?

## அமைச்சர் பீரிஸ் விளக்கம்

கொழும்பு, ஜூன் 30

ஜனாதிபதித் தேர்தலை நவம்பர் மாதத்துக்கு முன்னர் நடத்துமாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கேட்டார். ஆனால் சட்டத்தின்படி அவ்வாறு நவம்பர் மாதத்துக்குமுன்னர் தேர்தலை நடத்தமுடியாது. இதனாலேயே நாம் ரணிலின் கோரிக்கையை ஏற்றுக் கொள்ள முடியாத நிலையில் மாகாணசபைத் தேர்தலை நடத்தத் தீர்மானித்தோம்.

இவ்வாறு அரசமைப்புஇன விவகார தேசிய நல்லிணக்க அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் தெரிவித்தார்.

இலங்கை அரசமைப்பு விதிகளின்படி ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட ஒருவர் நான்கு வருடங்களாவது ஜனாதிபதியாக இருந்த பின்னரே ஜனாதிபதி தேர்தல் பற்றி நடவடிக்கைகளெடுக்க முடியும்.

தற்போது ஜனாதிபதியாக உள்ள சந்திரிகா குமாரதுங்க 1994 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10 ஆம் திகதியே பதவி ஏற்றிருந்தார். எனவே சட்டத்தின்படி எதிர்வரும் நவம்பர் மாதம் 10 ஆம் திகதிக்கு பின்னரே ஜனாதிபதியின் நான்கு வருட ஆட்சி முடிவடையும். அதன் பின்னரே ஜனாதிபதி தேர்தலை நடத்த முடியும்.

இதனைக் கருத்தில் கொண்டே நாம் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் மாகாணசபைத் தேர்தலை நடத்தத் தீர்மானித்துள்ளோம். அத்துடன் ஐந்து மாகாணசபைகளுக்குமான பதவிக் காலங்களும் முடிவடைந்துள்ளன. எனவே மாகாணசபைத் தேர்தலை விரைவில் நடத்த வேண்டியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

(இ-10-9)

# வாழ்த்துகின்றோம்

கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் ஏறக்குறைய 30 ஆண்டுகள் நல்லாசிரியனாகவும், பிரதி அதிபராகவும் கல்வியுலகிற்குத் தொண்டாற்றி

01 - 07 - 1998 யா/பன்னாலை சேர் கனகசபை
அ. த. க. பாடசாலையில் இருந்து
ஓய்வு பெறும் பிரதி அதிபர்

## உயர்திரு. க. கார்த்திகேசு

அவர்களை வாழ்த்துவதுடன், அவர் சகல ஐஸ்வரியங்களும் நிரம்பப்பெற்று நீடூழி காலம் வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்

யா/பன்னாலை சேர் கனகசபை
அ. த. க. பாடசாலை,
காரைக்கால் சிவன்கோயிலடி,
இணுவில்.

(சி/4131)

# பயிற்சி வகுப்புகள்

யாழ்ப்பாணம், ஜூன் 30

நிதி அமைச்சு, ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றின் உதவியுடன் பொதுக் கணக்கியல் அபிவிருத்தி நிறுவனத்தினால் அரச திணைக்களங்களின் கணக்கு எழுதுநர்கள் கணக்கு பதிவாளர்கள், உள்ளக கணக்காய்வு எழுதுநர்கள் ஆகியோருக்குப் பயிற்சி வ்குப்புகள் நடத்தப்படவுள்ளன.

பத்து நாள்கள் நடைபெறும் இப்பயிற்சியில் ஒவ்வொரு வகுப்பிலும் 30 பயிற்சியாளர்கள் மட்டும் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

இப்பயிற்சிக்கு விண்ணப்பிப்போர் தற்போது கணக்குத் தொடர்பான கடமைகளை ஆற்றுபவர்களாக இருப்பதுடன் இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன் இதற்கான விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறும் கோரப்படுகின்றனர்.

(இ-5)

# எழுத்தறிவு பாடநெறி

மூளாய், ஜூன் 30

மூளாய் சைவப்பிரகாசா வித்தியாலயத்தில் புதிய எழுத்தறிவூட்டல் பாடநெறி ஆரம்பிக்கப்படவுள்ளது.

எழுத, வாசிக்கத் தெரியாத, வளர்ந்த மாணவர்களுக்கு எழுத்தறிவூட்டும் நோக்கில் இப் புதிய பாடநெறி ஆரம்பிக்கப்படவுள்ளது.

கல்வித் திணைக்களத்தின் முறைசாராக் கல்விப் பிரிவின் அனுசரணையுடன் இப் பயிற்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

(இ-999-)

# கால்நடை விவரம் திரட்டல்

வலி.தென்மேற்கு, ஜூன் 30

நவாலி விவசாயிகள் சம்மேளனம் விரைவில் கால்நடைகளின் விவரங்களைத் திரட்டவுள்ளது.

கால் நடைகளின் விவரங்களின் ஊடாக கட்டாக்காலி ஆடு, மாடுகள் இனங்காணப்படுவதுடன் அவற்றைப் பிடித்து ஏலத்தில் விடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட கால்நடைகளுக்கு இலக்கமிடும் நடைமுறை செயற்படுத்தப்படும் என செயலாளர் எஸ். ரமேஷ் தெரிவித்தார்.

(இ-185-9)

# அரசாங்க அறிவித்தல்

## தேருநர் பதிவேடுகள் திருத்தம் -- 1998

1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 12 (1) ஆம் பிரிவின்படி 1998 ஆம் ஆண்டுக்குரிய தேருநர் பதிவேடுகளின் திருத்தம் ஆரம்பமாகிவிட்டதென்று இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

(2) தற்சமயம் நடைமுறையிலிருக்கும் தேருநர் பதிவேடுகளின் பிரதிகள் அல்லது அவற்றின் பாகங்கள் பதியும் அலுவலர்களால் கீழ்க்காணும் அலுவலகங்களில் பார்வைக்கு வைக்கப்படும்.

| பதிவேடுகள் அல்லது அவற்றின் பாகங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள அலுவலகங்கள், | பார்வைக்கு வைக்கப்படும் பதிவேடுகள் அல்லது அவற்றின் பாகங்கள், |
|---|---|
| 2. 1. மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம் | அரசாங்க அதிபர் அம்மாவட்டத்திற்குப்பதியும் அலுவலராயிருக்கும் அந்தத் தேர்தல் மாவட்டங்களுக்கான பூரணமான தேருநர் பதிவேட்டுப் பிரதி. |
| 2. 2. பிரதேச செயலகம் | பிரதேச செயலகப் பிரிவு அடங்கிய பகுதியிலுள்ள தேருநர் பெயர்களடங்கிய பதிவேட்டின் பாகங்கள். |

(3) ஏதாவதொரு தேர்தல் மாவட்டத்தில் ஒரு தேருநராயிருக்கத் தகுதியுள்ள ஒவ்வொருவரும் தமது பெயர் தேருநர் பதிவேட்டில் பதியப்பட்டிருக்கிறதா என்று மேலே குறிப்பிடப்பட்ட தேர்தல்கள் அலுவலகத்தில் உள்ள தேருநர் பதிவேட்டை அல்லது பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட பாகத்தைப் பரிசீலனை செய்வதன் மூலம் நிச்சயப்படுத்திக் கொள்ளலாம்.

(4) தேருநர் பதிவேட்டை அல்லது அதன் பொருத்தமான பாகத்தைப் பரிசீலனை செய்து தமது பெயர் அவ்விடாப்பில் பதியப்படவில்லை எனக் காணும் ஒவ்வொருவரும் 1998ஆம் ஆண்டு ஜூன் மாதம் 01ஆம் திகதி 18 அல்லது அதற்கு மேற்பட்ட வயதினர் ஒவ்வொருவரும் அதில் தமது பெயரை கீழ்க்காணும் முறையில் இடுவித்துக் கொள்ளலாம்.

4. 1. இவ்வறிவித்தலோடு இணைக்கப்பட்டிருக்கும் இணைப்படிவத்தில் 1998 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 31 ஆம் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ பொருத்தமான தேர்தல் மாவட்டத்தின் பதியும் அலுவலருக்கு தங்கள் பகுதி கிராம உத்தியோகத்தர் ஊடாக எழுத்து மூலம் ஒரு விண்ணப்பத்தினைச் செய்யலாம். இதற்கான விண்ணப்பப் பத்திரத்தை உங்கள் பிரிவு கிராம உத்தியோகத்தரின் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

4. 2. பதியப்படுவதற்கான தகைமைபற்றி எல்லாத் தகவல்களையும் கிராம உத்தியோகத்தரினால் தமக்குக் கொடுக்கப்பட்ட விசேட பத்திரம் எதிலும் கொடுத்தும், கிராம உத்தியோகத்தரினால் கேட்கப்படும் ஏனைய விவரங்களைக் கொடுத்தும், இவ்விண்ணப்பப் பத்திரத்தை உங்கள் பிரிவின் கிராம உத்தியோகத்தரின் அலுவலகத்தில் கையளிக்கவும்.

(5) உங்களினால் கையளிக்கப்பட்ட விண்ணப்பப் பத்திரத்தை, உங்கள் பிரிவின் கிராம உத்தியோகத்தர், தனது சிபார்சுடன் பதிவு அலுவலருக்கு அனுப்பி வைப்பார்.

பதிவு அலுவலர்,
தேர்தல் மாவட்ட இல. 10
யாழ்ப்பாணம்.

செயலகம்,
யாழ்ப்பாணம்,
1998 ஜூன் மாதம் 22 ஆம் திகதி.

### ஒரு தேருநராக பதியப்படுவதற்கான விண்ணப்பப்பத்திரம்-1998

........................................ பிரிவு கிராம உத்தியோகத்தர் ஊடாக பதியும் அலுவலர், தேர்தல் அலுவலகம், யாழ்ப்பாணம்.

........................................ ஆகிய நான் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் ஒரு தேருநராக பதிவு செய்து கொள்ள இத்தால் விண்ணப்பித்துக் கொள்கின்றேன்.

(2) எனது விண்ணப்பத்தின் சார்பாக கீழ்க்காணும் விவரங்கள் தரப்படுகின்றன.

2.1: முழுப் பெயர்:
........................................

2.2: முகவரி:
........................................
........................................

2.3: பிறந்த திகதியும் வயதும்:
........................................

2.4: 1998 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 01 ஆம் திகதி மேற்படி முகவரியில் சாதாரண குடியிருப்பாளரா?
........................................

2.5: பால்: ........................................

2.6: இனம்; ........................................

2.7: பதிவு மூலம் இலங்கைப் பிரஜையாயின் பிரஜாவுரிமைப் பத்திர இலக்கத்தினைக் குறிப்பிடுக.
........................................

2.8: தேசிய அடையாள அட்டை அல்லது விசேட அடையாள அட்டை இலக்கம்;
........................................

2.9: கிராம உத்தியோகத்தரின் பிரிவு:
........................................

........................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி: ........................

### கிராம உத்தியோகத்தரின் அறிக்கை

சிபார்சு செய்யப்படுகின்றது / செய்யப்படவில்லை.
சிபார்சு செய்வதாயின் பின்வரும் விவரங்களை கிராம உத்தியோகத்தர் பூர்த்தி செய்தல் வேண்டும்.

வாக்கெடுப்பு பிரிவு;
........................................

வாக்கெடுப்பு மாவட்ட இலக்கம்: ........................
வீட்டு இலக்கம்; ........................
கிராமம் / வீதி: ........................

........................................
கிராம உத்தியோகத்தரின் கையொப்பமும்
பிரிவின் இலக்கமும்

திகதி: ........................

(சி/4 095)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## அரசிடம் உண்டு ஆயுதம்

மாகாண சபைத் தேர்தல்களை நடத்தும் விவகாரத்தில் அரசாங்கம் ஆப்பு இழுத்த குரங்கின் நிலையில் உள்ளது.

ஏற்கனவே இப்பத்தியில் குறிப்பிட்டிருந்தது போல மாகாண சபைத் தேர்தலைத் தவிர்த்துக் கொள்வதே அரசாங்கத்தின் உள்ளார்ந்த விருப்பம். எனினும் அரசமைப்புச் சட்டம் அதற்கு இடம் கொடுக்காமையினால் இவ் விடயத்தில் வளைந்து, நெளிந்து வழுக்கிப் போக முயன்று வருகிறது.

மாகாண சபைத் தேர்தலைஒத்திவைப்பதானால் ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டுமென்ற எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா விடுத்த கோரிக்கையில் — தெரிவித்த யோசனையில் — தொங்கிப் பிடித்துக் கொண்டு நிற்க விருப்பமுள்ளதாக நடித்தது. எனினும் ஜனாதிபதித் தேர்தலை ஒகஸ்ட் மாதத்திலேயே நடத்த வேண்டும் என்று ரணில் கேட்டுக் கொண்டதை ஒரு சாட்டாக வைத்துக் கொண்டு அதிலிருந்தும் அரசு 'நைசாக' விலகிக் கொண்டது.

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு — தேர்தல் பணிகளில் ஈடுபடுத்துவதற்கு — தேர்தல் காலத்தில் பாதுகாப்பளிப்பதற்கு — போதிய படையினரை பணியிலீடுபடுத்த முடியாது என்ற காரணத்தைக் காட்டி, மாகாண சபைத் தேர்தல்களை ஒத்தி வைப்பதன் அவசியத்தை அரசாங்கம் ஆரம்பத்தில் வலியுறுத்தியது. அதனால். இப்போது தேர்தல் நடத்தும் முடிவு தேவையான பாதுகாப்பு வழங்க முடியும் என்ற நம்பிக்கையுடனா செய்யப்பட்டது என்ற கேள்வி எழுந்துள்ளது. தேர்தல் பணிகளில் படையினரை ஈடுபடுத்தினால் வடக்கு—கிழக்கில் நடைபெறும் போர் ஸ்தம்பித்து விடுமே என்ற ஆதங்கம் பாதுகாப்புப் பிரதியமைச்சர் அனுருத்த ரத்வத்தைக்கு! அதனால் அவர் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதை மும்முரமாக எதிர்க்கிறார். இது குறித்த தனது மன நிலையை பொதுக் கூட்டமொன்றில் பகிரங்கமாகவும் வெளியிட்டிருக்கிறார்.

ஆகையால் மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும், அதே போன்று வடக்குக் கிழக்குப் போரையும் நடத்த வேண்டும் என்ற இரு முனைப் பிரச்சினை அரசை உலுப்புகிறது. இரு தலைக் கொள்ளி எறும்பு போல் ஆகிவிட்ட நிலையில் அரசு குழப்பமடைந்துள்ளது. தேர்தலை நடத்துவதை விட போரை நடத்துவதனையே அரசு அதிகம் விரும்பும் என்பதில் ஐயமில்லை.

அந்த வகையில் கூடிய முன்னேற்றமாக மாகாண சபைத்தேர்தலை கடைசிக் கட்டத்தில் அரசு ஒத்தி வைக்கும் என்று நிச்சயமாக எதிர்பார்க்கலாம். அதற்கு ஆயுதமாகப் பாவிப்பதற்கு இருக்கவே இருக்கிறது அவசரகாலச் சட்டம்.போர் தீவிரமாகும்; தேர்தல் பின் தள்ளப்படும். இது குறித்து எவ்வித சந்தேகமும் கொள்ளத் தேவையில்லை.

# உள்ளூராட்சி சபைநிதியில் ரூ.1லட்சம் ஆயுள்வேத வைத்தியசாலைகளுக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 30

யாழ். மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சிச் சபைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள 30 லட்சம் ரூபாவில், ஒரு லட்சம் ரூபாவை ஆயுள்வேத வைத்திய சாலைகளுக்கு வழங்க இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு – கிழக்கு மாகாண சுதேச மருத்துவப் பணிப்பாளர் கே. பாலசுப்பிரமணியம் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

யாழ். உள்ளூராட்சித் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடந்த ஆயுள்வேத வைத்தியர்கள், மருந்துக்கலவையாளர்கள் மற்றும் தொழிலாளர் ஆகியோருக்கான கலந்துரையாடலிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது;

யாழ். மாவட்டத்தில் சுகாதார வைத்திய சேவைகள் இயல்பு நிலைக்குத் திரும்பி விட்டனவா? சீராக நடைபெறுகின்றதா? என்பதை அறிய சுகாதார அமைச்சு மிகுந்த ஆர்வமாக உள்ளது.

இங்குள்ள பிரச்சினைகளை அறிந்து அவற்றை நிவர்த்தி செய்வதற்கும் அவர்கள் ஆர்வமாக இருக்கிறார்கள்.

இப்பகுதிக் குறைபாடுகள் பற்றி அறிந்து வருவதற்காக சுகாதார அமைச்சின் செயலர் என்னை இங்கு அனுப்பி வைத்துள்ளார்.

இங்குள்ள பிரச்சினைகள் பற்றி நான் பல தரப்பட்டவர்களுடனும் கலந்துரையாடி வருகின்றேன்.

உங்கள் பிரச்சினைகள் தொடர்பாகவும் அதனை எவ்வாறு நிவர்த்திக்கலாம் என்பது தொடர்பாகவும் நான் அறிக்கை ஒன்றை சுகாதார அமைச்சுக்கு சமர்ப்பிக்கவிருக்கிறேன் — இப்படி அவர் கூறினார்.

இந்த கலந்துரையாடலில் ஆயுள்வேத மருத்துவர்கள், மருந்துக் கலவையாளர்கள், தொழிலாளர்கள் சம்பந்தமான 27 பிரச்சினைகள் குறித்து எடுத்துக் கூறப்பட்டது.

இவற்றில் சில பிரச்சினைகள் தொடர்பாக தன்னால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய விளக்கத்தையும், ஏனைய பிரச்சினைகளுக்கு எவ்வாறு தீர்வு காணமுடியும் என்பது பற்றியும் பணிப்பாளர் கே. பாலசுப்பிரமணியம் விரிவாக எடுத்து விளக்கினார்.

இதேவேளை சுதேச வைத்தியர்கள், சுதேச வைத்திய சங்கப் பிரதிநிதிகள், ஆயுள்வேத பாதுகாப்பு சேவைப் பதிவுக்காகக் காத்திருப்பவர்கள் ஆகியோருடனான கலந்துரையாடல் ஒன்றிலும் பணிப்பாளர் கே. பாலசுப்பிரமணியம் கலந்து கொண்டார். (இ-6)

## கண்காட்சி

வலி.தென்மேற்கு, ஜூன் 30

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரியில் மூன்று நாள்கள் நடைபெற்ற கண்காட்சியை பதினையாயிரத்திற்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்களும், ஆசிரியர்களும், பொதுமக்களும் பார்வையிட்டனர்.

(இ-185-9)

## பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், ஜூன் 30

யாழ். கல்வித்திணைக்களம் நடத்தும் முறைசார கல்விப் பிரிவின் ஆங்கில தட்டச்சு சுருக்கெழுத்து பயிற்சி நெறி ஒன்று யாழ்ப்பாணம் நகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இதுவரை மேற்படி பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்காதவர்கள் கல்வித் தகைமைச் சான்றிதழ், பாடசாலை விடுகைப் பத்திரம் ஆகிய ஆவணங்களுடன் சமுகமளிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

மேற்படி பயிற்சி நெறிக்கு விண்ணப்பிப்போர் ஜி. சீ. ஈ. சாதாரண தரத்தில் ஆங்கிலம் உட்பட 6 பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-4)

## மின்மானி

வலிகாமம் தெற்கு, ஜூன் 30

மானிப்பாய், உடுவில் பகுதிகளில் உள்ள வீடுகளில் பழைய மின் மானிகள் அகற்றப்பட்டு புதிய மின்மானிகள் பொருத்தப்பட்டுவருகின்றன. (இ- 182)

## ஹண்டி பேரின்பநாயகம் நூற்றாண்டு நிறைவு விழா

கொக்குவில் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் ஹண்டி பேரின்பநாயகத்தின் நூற்றாண்டு நினைவு தின விழா அடுத்த வருடம் மார்ச் மாதம் 28 ஆம் திகதி கொண்டாடப்படவுள்ளது.

இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தலைவரும், யாழ். பல்கலைக்கழக வணிகவியல் துறைத் தலைவருமான கே. தேவராஜா தெரிவித்தார்.

அண்மையில் இக் கல்லூரிக்கு விஜயம் செய்த கல்லூரியின் பழைய மாணவரும், லண்டன் பழைய மாணவர் சங்கத் தலைவருமான கே. கனகசுந்தரம் முன்னாள் அதிபரின் நினைவாக கேட்போர் கூடம் ஒன்றை அமைப்பது தொடர்பாகவும் —

நூற்றாண்டு நினைவு மலர் வெளியிடுவது தொடர்பாகவும் —

லண்டன், கொழும்பு, கனடா முதலிய இடங்களில் நினைவு தின விழாக்களை நடத்துவது தொடர்பாகவும் —

பழைய மாணவர் சங்க உறுப்பினர்களுடன் கலந்துரையாடினார் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

## ஊழியர் நம்பிக்கை நிதியம்

# கணனி மயமான பின்பு வைப்பு விவரம் இல்லை

கொழும்பு, ஜூன் 30

கடந்த 93 ஆம் ஆண்டு ஊழியர் நம்பிக்கை நிதியப் (ஈ.ரி.எப்) பணிகள் கணனி மயப்படுத்தப்பட்ட பின்னர் ஊழியர்களின் மொத்த வைப்பு விவரங்கள் கிடைக்கவில்லை என்று முறைப்பாடு கூறப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாடுகள் குறித்து விசாரணை நடத்திய அதிகாரிகளுக்கு பெரும் அதிர்ச்சி கிடைத்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

கணனி மயப்படுத்தப்பட்ட பின்னர் அங்கு பொருத்தப்பட்ட கணனிகள் வேறு பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டதாகவும்—

ஊழியர் நம்பிக்கை நிதியப் பணிகளை மேற்கொள்ளவில்லை என்றும்— விசாரணையில் தெரியவந்ததாம். (இ-1-3)

## திருட்டுகள் அதிகரிப்பு

# இரவில் பீதியுடன் உறங்கும் குடும்பங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 30

நல்லூர் ஆலயச் சுற்றாடலில் கடந்த சில வாரங்களாக திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

இரவில் உறங்கப்போகும் மக்களுக்கு அதுதான் சிந்தனை.

நல்லூர் ஆலயத்துக்கு முன்பாக தொடர்ந்து இரு வீடுகளில்களவு போனதைத் தொடர்ந்து மக்கள் இரவில் அச்சத்துடனேயே படுக்கைக்குச் செல்கின்றனர்.

அண்மையில் இளைஞன் ஒருவர் கனவு கண்டு 'திருடன்...திருடன்' என்று கத்த திருட்டுக்கள் குறித்து உஷாராக இருந்த அயலவர்கள் தடிகள் பொல்லுடன் ஓடி வந்த சம்பவமும் இடம்பெற்றது.

(இ - ரி)

### நாளை

ஆனி - 17

புதன்கிழமை

திதி: ஸப்தமி

நண்பகல் 12.23 வரை.

நட்சத்திரம்: உத்தரம்

பிற்பகல் 1.53 வரை.

நடேசர் ஆனி உத்தர தரிசனம்

சுபநேரம் 04.26 - 05.56

ராகுகாலம் 11.56 - [illegible]

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

நட்புக் கொள்வதில் நிதானம் வேண்டும். நட்புக் கொண்டபின் அதில் உறுதி வேண்டும்.

- சோக்கிரட்டீஸ்

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூன் 30

நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் பரிவார மூர்த்தி ஸ்ரீ விநாயகப் பெருமானுக்கு அமைக்கப்பட்ட சித்திரத்தேர் வெள்ளோட்டம் நாளை புதன்கிழமை காலை 9 மணி முதல் உள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது.

அன்றிரவு அம்பிகையின் கைலைக்காட்சி விழாவைத் தொடர்ந்து சிற்பக்கலைஞர் சு. இராசரெத்தினம், மற்றும் அவரது கலைஞர் குழுவினருக்கு பட்டமளித்துக்கௌரவிக்கப்படுவர். (இ-ரி)

★ ★ ★

நல்லூர் கைலாசநாதர் சிவன் கோயில் தேர்த்திருவிழா இன்று செவ்வாய்க் கிழமை காலை 8 மணிக்கு நடைபெறும்.

நாளை காலை 8 மணிக்கு தீர்த்தத் திருவிழா இடம் பெறும். (இ-103)

★ ★ ★

திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில் தேர்த்திருவிழா இன்று செவ்வாய் காலை 8 மணிக்கு நடைபெறும்.

நாளை தீர்த்தத் திருவிழா இடம்பெறும். (இ.103)

★ ★ ★

பாண்டியன்தாழ்வு ஆஞ்சநேயர் ஆலயத்தில் ஆனி உத்தரத்தையொட்டி நாளை புதன் காலை 7 மணிமுதல் நடராஜப் பெருமானுக்கும், அம்மை சிவகாம சுந்தரிக்கும் விசேட அபிஷேக ஆராதனைகளும், திருவூஞ்சல் என்பனவும் இடம்பெறும். (இ-100)

★ ★ ★

யாழ். வண்ணை ஸ்ரீ விசுவேச விநாயகர் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாள்கள் நடைபெறும்.

ஜூலை 8 ஆம்திகதி தேர்த் திருவிழாவும், மறுநாள் பூரணை தினம் தீர்த்தத்திருவிழாவும் இடம் பெறும். (இ-ரி)

★ ★ ★

சண்டிலிப்பாய் கல்வளைப் பிள்ளையார் கோயில் வெகுதானிய வருடமஹோற்சவம் நேற்று திங்கட்கிழமைகாலை 7 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினொரு நாள்கள் நடைபெறும்.

தேர்த்திருவிழா எதிர்வரும் 8 ஆம் திகதியும், மறுநாள் பூரணை தினம் தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (இ-152-ரி)

★ ★ ★

சாவகச்சேரி சந்திரசேகர வாரிவணநாத அருள்மிகு ஸ்ரீ சிவன் கோயிலின் தேர்த் திருவிழா இன்று செவ்வாய்க் கிழமை நடைபெறுகிறது.

காலை வசந்தமண்டபப் பூசையை அடுத்து பெருமான் தேரில் ஆரோகணித்து வீதிவலம் வந்துஅடியார்களுக்கு திருவருள் பாலிப்பார்.

மறுநாள் ஆருத்திரா தரிசனம் நன்னாளில் காலை தீர்த்தத் திருவிழா இடம் பெறும். (இ-30)

★ ★ ★

அளவெட்டி வடக்கு தவளக்கிரி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் கோயிலின் தேர்த்திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை காலை நடைபெறும்.

மறுநாள் காலை ஆனிஉத்தர நன்னாளில் தீர்த்தத் திருவிழா நடை பெறும். (இ-30)

★ ★ ★

வட்டுக்கோட்டை விசாலாட்சி சமேத அருள் மிகு காசி விசுவநாதர் (சிவன் கோயில்) ஆலயத்தின் தேர்த் திருவிழா இன்று செவ்வாய்க் கிழமைகாலை நடைபெறும்.

மறுநாள் ஆனி உத்த, தினம் தீர்த்தத்திருவிழாவும்ர உதயம் காலை ஆருத்திரா தரிசனமும் இடம் பெறும். (இ-30)

★ ★ ★

அராலி வடக்கு- மயிலம் புலம் அருள் மிகு ஸ்ரீ கந்த சுவாமி ஆலயத்தின் வருடாந்த அலங்காரத் திருவிழா நாளை புதன்கிழமை காலை விசேட அபிஷேகம், பூசையுடன் ஆரம்பமாகிப் 10 தினங்கள் நடைபெறும்.

எதிர் வரும் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை விசேட அபிஷேகம், பூசையும், சண்முகா அர்ச்சனையும், நண்பகல் சுவாமி வீதி வலம்வருதலும்இடம்பெறும். (இ-30)

★ ★ ★

கோண்டாவில் வடக்கு அருள் மிகு ஸ்ரீ சிவபூதவராயர் சுவாமி ஆலயத்தின் தேர்த்திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை காலையும், மறுநாள் ஆனிஉத்தர தினம் காலை தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (இ-30)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

வலி. வடக்கு, வலி. தெற்கில்

# சுகாதாரப் பரிசோதகர்கள் பற்றாக்குறை நீடிக்கிறது

வலிகாமம் தெற்கு, ஜூன் 30

வலிகாமம் வடக்கு, வலிகாமம் தெற்கு பிரதேச செயலகங்களுக்கான தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் போதிய பொதுச் சுகாதார பரிசோதகர்கள் இன்மையால் சுகாதாரச் சீர்கேடுகளை உடனடியாக கவனிக்க முடியாமல்உள்ளதாக தெரிய வருகிறது.

இரு பிரதேச செயலகங்களுக்கும் உட்பட்ட சுமார் 57 ஆயிரம் மக்களின் சுகாதாரத்தேவைகளை கவனிக்கவென இரு சுகாதார பரிசோதகர்களே நியமிக்கப்பட்டுள்ளனர்.

குறைந்தபட்சம் ஏழு சுகாதாரப் பரிசோதகர்களாவது கடமையாற்ற வேண்டிய இடத்தில் இருவர் மட்டுமே மிகுந்த சிரமத்துடன் கடமையாற்றி வருகின்றனர் என்று கூறப்படுகிறது.

யாழ்ப்பாண மாவட்டத்துக்குத் தேவையான 56 சுகாதாரப் பரிசோதகர்களுக்கு பதிலாக எட்டுப்பேரே கடமையாற்றி வருவதாக சுகாதாரப் பகுதி வட்டாரங்களில் இருந்து அறிய வருகின்றது.

இணுவில், உடுவில், சுன்னாகம், கந்தரோடை, மல்லாகம், தெல்லிப்பழை, அளவெட்டி, ஏழாலை, புன்னாலைக்கட்டுவன் ஆகிய பிரதேசங்களின் சுகாதாரத் தேவைகளை இந்த இரு சுகாதாரப் பரிசோதகர்களே கவனித்து வருகின்றனர்.

## நெடுந்தீவுக்கான குமுதினி படகு இன்னும் இல்லை

நெடுந்தீவு, ஜூன் 30

நெடுந்தீவுக்கான குமுதினி படகுச்சேவை இன்னும் இடம் பெறவில்லை.

இது குறித்து உரியவர்களுடன் தொடர்பு கொண்டு தமக்குத் தெரியப்படுத்துமாறு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா வேலணை பிரதேசசபைத் தலைவர் என். மனோகரனிடம் கோரி உள்ளார். (இ-111)

## சனசமூக நிலையங்களில் விளையாட்டுப் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 30

யாழ். மாவட்டத்திலுள்ள சனசமூக நிலையங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் தற்பொழுது நடைபெற்று வருகின்றன.

பிரதேச சமாச மட்டங்களில் தற்பொழுது நடைபெற்று வரும் போட்டிகள் இறுதியில் யாழ். மாவட்ட சம்மேளன மட்டத்தில் நடத்தப்படவுள்ளன.

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாசம் நடத்தும் இறுதிப் போட்டிகள் ஜூலை 15ஆம் திகதிக்குள் நடத்தி முடிக்கப்படவேண்டும் என்று உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி. வி. கிருஸ்ணசாமி அறிவுறுத்தியுள்ளார்.

வலிகாமம் கிழக்கு சனசமூக நிலையங்களின் சமாசம் நடத்திய விளையாட்டுப் போட்டிகள் கடந்த வாரம் சமாசத்தலைவர் மு. பொன்னுத்துரை தலைமையில் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நடைபெற்றன.

23 கழகங்கள்இந்த தடகள விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றின. சைக்கிளோட்டம், மரதனோட்டம் போன்றபோட்டிகளும்இந்த சமாசத்தினால் நடத்தப்பட்டன.

யாழ். மாநகர சபை சனசமூக நிலையங்களின் சமாசம், நல்லூர்ப்பிரதேச சமாசம், உடுவில் பிரதேச சமாசம் போன்றவை ஏற்கனவே சனசமூக நிலையங்களுக்கிடையிலான தடகள விளையாட்டுப் போட்டிகளை நடத்தியுள்ளன.

ஏனைய பகுதிகளிலுள்ள சமாச விளையாட்டுப் போட்டிகள் அனைத்தும் விரைவில் நடத்தப்படும்என்றும் அதன் சம்மேளன மட்டத்திலான போட்டிகள் நடைபெறும்என்றும் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தெரிவித்தார். (இ-5)


மூளாய் இந்து இளைஞர் மன்றம்
நூலக வளர்ச்சி நிதிக்காக நடத்தப்பட்ட
அதிஷ்ட லாபச் சீட்டு முடிவுகள்

1 ஆம் பரிசு 2512
2 ஆம் பரிசு 568
3 ஆம் பரிசு 2425

ஆறுதல் பரிசுகள்
1. 1033
2. 2571
3. 2667
4. 970
5. 1082

பரிசில்கள் அன்பளிப்புச் செய்தோர்
1. முதலாவது பரிசு
திரு. இ. த. விக்கினராஜா (யாழ்.)
2. ஆறுதல் பரிசுகள்
சச்சியா இரும்பகம் வட்டுக்கோட்டை
அம்பாள் இரும்பகம் வட்டுக்கோட்டை.
திரு. க. தர்மேசன் (மூளாய்)
திரு, சோ. யசோதரன் (மூளாய்)
திரு. சோ. யசோதரன் (மூளாய்)
இவர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள்.

விளம்பர அனபளிபபு:-
சித்தி விநாயகர் வர்த்தக நிலையம்
மூளாய் சுழிபுரம்
றெமிங்ரன் கல்வி வளர்சோலை
மூளாய் சுழிபுரம் (கிளை) (57224)


## சாரதாதேவி திருவுருவப்படம் திரைநீக்கம்

கொழும்புத்துறை, ஜூன் 30

தூய அன்னை ஸ்ரீ சாரதா தேவியின் திருவுருவப்படம் திரை நீக்கம் செய்யும் நிகழ்வு நாளை புதன்கிழமை காலை 9-00 மணிக்கு உரும்பிராய் சந்திரோதய வித்தியாலயத்தில் அதிபர் தி. தர்மலிங்கம் தலைமையில் நடைபெறும்.

அன்னையின் திருவுருவப் படத்தை பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் சுவாமி சித்ரூபானந்தா சம்பிரதாய பூர்வமாகத் திரை நீக்கம் செய்து வைப்பார் (இ-30)

## விவசாயிகள் சம்மேளனக் கூட்டம்

வலிகாமம் தெற்கு, ஜூன் 30

மானிப்பாய் வடக்கு விவசாயிகள் சம்மேளன வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற உள்ளது.

மானிப்பாய் வளர்மதி சனசமூக நிலையத்தில் சி. இரத்தினசிங்கம் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் உடுவில் கமநலக் கேந்திர நிலைய விவசாயப் பெரும்பாக உத்தியோகத்தர் பொ. குகநாதனும் கலந்து கொள்வார். (இ-152)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம் ஜூன்,30

வட்டுக்கோட்டை கார்த்திகேய வித்தியாலய வருடாந்தப் பரிசளிப்பு விழா எதிர்வரும் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய அதிபர் க. சந்திரசேகரன் தலைமையில் நடைபெறும்.

வலிமேற்கு பிரதேச செயலர் கா. சந்திரராச பிரதம விருந்தினராகவும், சங்கானைக் கல்விக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ. வ. கணேசலிங்கம், ஓய்வு பெற்ற கடற்படை அதிகாரி கலக். விசுவநாதன்ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (இ-7)

## உயிலங்குளத்தில்கடைகள் அமைக்க நடவடிக்கை

வவுனியா, ஜூன் 30

இராணுவக் கட்டுப்பாட்டற்ற வன்னிப் பிரதேசத்தில் இருந்து மன்னார், வவுனியாவுக்கு பொருள் வாங்கச் செல்பவர்களுக்கு உயிலங்குளத்தில் கடைகள் அமைக்க மன்னார் அரச அதிபர் குறூஸ் நடவடிக்கை எடுத்துள்ளார்.

வன்னியில் இருந்து உயிலங்குளம் ஊடாக வரும் வியாபாரிகள் தமக்குத் தேவையான பொருள்களை மன்னார் அல்லது வவுனியாவுக்குச் சென்றே கொள்வனவு செய்ய வேண்டியுள்ளது.

இதனால் அந்த வியாபாரிகள் அடையும் அசௌகரியங்களை நீக்கும் வகையில் உயிலங்குளம் தடை முகாமுக்கு அருகில் கடைகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

ப.நோ.கூ. சங்கங்கள் மற்றும் வியாபாரிகளிடம் அப்பகுதியில் கடை அமைக்கும்படி மன்னார் அரச அதிபர் கேட்டுள்ளார். (இ-164-3)

## உயர் வகுப்பு மாணவருக்கு கருத்தரங்கு

மருதனா மடத்தில் இயங்கும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் நாளை புதன்கிழமை பிற்பகல் 1-00 மணிக்கு ஜி.சி.ஈ. (உயர்தர) வகுப்பு மாணவர்களுக்குக் கருத்தரங்கு கல்லூரி அதிபர் கே. நாகராசா தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சேவாச்சிரமம் சுவாமி சித்ரூபானந்தா பங்கு பற்றி ''விஞ்ஞானப் பார்வையில் சமயம்'' என்ற தலைப்பில் கருத்துரை வழங்குவார். (இ-30)


யாழ். குடாநாட்டு வாடிக்கையாளர்களுக்கு
ஒரு முக்கிய அறிவித்தல்
EDNA APPLIANCES (Pvt.) Ltd.
கொழும்பு எட்னா அப்ளையன்ஸஸ் (தனியார்) வரைவுள்ளது என்னும் நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தராகிய நாங்கள் உங்களுக்கு அவர்களிடமிருந்து நேரடியாக அவர்களால் தயாரித்து இணைக்கப்பட்ட நீர் இறைக்கும் இயந்திரங்களை விநியோகம் செய்கிறோம். குறிப்பாக
கிறிவ்ஸ் என்பீல்ட்
இயந்திரத்தின் தொழில்நுட்ப விதிகளுக்கேற்ப அதற்குரிய பம்புகள் அவர்களால் தயாரிக்கப்படுகிறது. கிறிவ்ஸ் என்பீல்ட இயந்திரத்துடன் பம்புகள் இணைக்கும் நடவடிக்கைகள் கிறிவ்ஸ் என்பீல்ட் நிறுவனத்தால் நேரடியாக மேற்பார்வை செய்யப்படுகின்றது எனவே கிறிவ்ஸ் என்பீல்ட் நிறுவனத்தின் தரம் உறுதி செய்யப்பட்ட என்பீல்ட் நீரிறைக்கும் இயந்திரத்தைப் பெற்றுக்கொள்ள எம்மை நாடுங்கள்
EDNA APPLIANCES (P.v.t) Ltd நிறுவனத்தின்
சில்லறை விலைகள்
என்பீல்ட் M.K 12 - ரூபா 16 990
என்பீல்ட M.K 25 - ரூபா 21,990
ஏ. எஸ். பொன்னம்பலம் அன்ட் சன்
176, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(57227)


31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம் 20—04—1987

மறைவு 31-05—1998

செல்வன்

### திருநாவுக்கரசு லவக்குமார்

கடந்த 31-5-98 இல் இறைபதம் அடைந்த எமது அன்புச் செல்வன் திருநாவுக்கரசு லவக்குமாரின் அந்தியேட்டி இன்று (30-6-98) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்களும் உடுவில் மான்ஸ் பாடசாலை ஆசிரியர்களும், மாணவர்களும், யூனியன் கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்களும் குறிப்பாக ஆண்டு 6 மாணவர்களும் அன்றையதினம் நடைபெறும் மதிய போசனத்தில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

வே. திருநாவுக்கரசு,
(தந்தை)

சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.

(57199)


இனியும் தாமதம் வேண்டாம் விரைவாகத் தேரேறி வந்திடுவீர்! தமிழர் குறை தீர்த்திடுவீர்!
இன்று (30-06-1998) சுழிபுரம் - பறாளாய்
ஈசுர விநாயகரின் தேர்த்திருவிழா
- சோழியூரான் பிறைசூடிக்குரு
(57226)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

# யாழ்ப்பாண மத்தியகல்லூரி
## லியோ கழகத்தை வாழ்த்துகின்றோம்

1998-06-27 இல் நடைபெற்ற சர்வதேச லயன்ஸ் கழகங்கள் மாவட்டம் 306 பிராந்தியம் 8 லியோ கருத்தரங்கில் சாதனை படைத்த எமது மத்திய கல்லூரி லியோ கழகத்தை உளமார பாராட்டி வாழ்த்துகின்றோம்.

1. சிறந்த லியோ தலைவன் விருது
லியோ. உ. தவபாலன்
2. சிறந்த கல்லூரி லியோ ஆலோசகர் விருது
லயன் ஐ புவனேந்திரன் (ஆசிரியர்)
3. சிறந்த லியோ கழகத்தைக் கொண்டுள்ள பாடசாலைக்கான முதன்மை விருது
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி
4. கழகசிறப்பானநிர்வாகத்திற்கானசிறப்புவிருது
5. இவ்வாண்டுக்கான சிறந்த லியோ கழக விருது

21-12-97 இல் ஆளுநர் லயன் K. தில்லைநாதன் அவர்களால் வழங்கப்பட்டது.

### மாவட்ட லியோ கழகம்
### நடத்திய போட்டிகளில் பெற்ற விருதுகள்

1. கரப்பந்தாட்டம் — 1 ஆம் இட விருது
2. மென்பந்து துடுப்பாட்டம் — 1 ஆம் இட விருது
3. உதைப்பந்தாட்டம் — 2 ஆம் இடம்
4. றேமன் முத்தையா தமிழ்ப் பேச்சுப் போட்டி — 2 ஆம் இடம் செல்வன் எஸ். தயாபரன்

ஆசிரியர் நலன்புரிச்சங்கம்,
அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், ஆளணியினர்.
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.

விளம்பர அன்பளிப்பு:

தர்சினி ஸ்ரோர்ஸ்
ஆடியபாதம் வீதி. நல்லூர், யாழ்ப்பாணம்.
றூபா பல்பொருள் விற்பனை நிலையம்,
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலிச் சந்தை.
சிவலிங்கம் மயூரதன் ஆண்டு 11 டி
சண்முகநாதன் பிரதீபன் ஆண்டு 11 டி
(சி/4139)

# ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வன்னியில் நிவாரணம் இழப்பு

வவுனியா, ஜூன் 30

வவுனியா மாவட்டத்தில் தங்கியுள்ள 11 ஆயிரத்து 634 இடம்பெயர்ந்த குடும்பங்களில் 5 ஆயிரத்து 556 குடும்பங்களுக்கே நாளை முதல் நிவாரணம் வழங்கப்படும் என்று வவுனியா செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

உலர் உணவு நிவாரணம் பெறும் குடும்பங்களின் எண்ணிக்கையை நாளை முதல் குறைக்கும் அரசின் திட்டத்துக்கமைய வன்னி மாவட்டத்தில் நிவாரணம் வழங்கப்படவிருக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்சமயம் நிவாரணம் பெறும் 32 ஆயிரத்து 674 குடும்பங்களில் 13 ஆயிரத்து 333 குடும்பங்களும் —

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்சமயம் நிவாரணம் பெறும் 18 ஆயிரத்து 889 குடும்பங்களில் 8 ஆயிரத்து 889 குடும்பங்களும் —

மன்னார் மாவட்டத்தில் தற்சமயம் நிவாரணம் பெறும் 16 ஆயிரத்து 182 குடும்பங்களில் 14 ஆயிரத்து 444 குடும்பங்களும் — நிவாரணம் பெறத்தகுதியுடையவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

(உ-164-3)

## சாரணிய ஆசிரியருக்கு கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 30

சாரணிய வழிகாட்டி ஆசிரியைகளுக்கான கூட்டம் எதிர்வரும் 4 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெறவுள்ளதாக யாழ்.மாவட்ட ஆணையாளர் திருமதி சிவராஜா அறிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெறவுள்ள சாரணிய பயிற்சியில் கலந்து கொள்ளவுள்ள வழிகாட்டிகள் இக்கூட்டத்தில் தெரிவு செய்யப்பட உள்ளனர். (ஐ)

## கலாசாலை நிறுவிய நாள் நிகழ்வு

சுன்னாகம், ஜூன் 30

பலாலி ஆசிரிய கலாசாலை நிறுவியநாளை யொட்டிய நிகழ்வு நாளை புதன்கிழமை காலை 8-30மணிக்கு நல்லூர் சட்டநாதர்கோயிலில் நடைபெறவுள்ளது.

சைவமாணவர் மன்றத் தலைவர் இ.சண்முகசுந்தரம் தலைமையில் நடைபெற உள்ள இந்த நிகழ்வில் கலாசாலை அதிபர் சோ. பத்மநாதன், சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் ஆகியோரும் ஆசிரிய மாணவர்களும் கருத்துரை வழங்குவர். அத்துடன் ச. லலீசன் குழுவினரின் ''பேய்வடிவம் கேட்ட பெண்'' வில்லிசையும், ஆசிரிய மாணவிகளின் பண்ணிசையும். அன்னதானமும் இடம்பெறும். (ஐ-27)

## தமிழ் உறுப்பினர்கள் கூட்டத்தை பகிஷ்கரிப்பு

வவுனியா, ஜூன் 30

வவுனியா வைத்தியசாலை மதியுரைக் குழுவில் அங்கம் வகிக்கும் தமிழ் உறுப்பினர்கள் கடந்த வெள்ளிக்கிழமை நடந்த மதியுரைக் குழுக் கூட்டத்தைப் பகிஷ்கரித்தனர்.

வவுனியா ஆஸ்பத்திரியில் நிர்வாகம் தொடர்பான ஆலோசனைகள் வழங்கும் மதியுரைக் குழுவில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களால் நியமிக்கப்பட்ட எட்டுப் பேர் அங்கம் வகிக்கின்றனர்.

இந்த உறுப்பினர்களுக்குப் புறம்பாக 12 சிங்களவர்கள் மதியுரைக் குழுவுக்கு பிரதி சுகாதார அமைச்சர் சுமதி பாலாவால் நியமிக்கப்பட்டனர்.

75 சத வீதம் தமிழர் வாழும் வவுனியாவில் இவர்கள் கூடுதலாக நியமிக்கப்பட்டதைக் கண்டிக்கும் வகையிலேயே தமிழ் உறுப்பினர்கள் கூட்டத்தைப் பகிஷ்கரித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுகாதார அமைச்சருக்கு ஆட்சேபம் தெரிவித்துள்ளனர்.

(இ-164-3)

## வெடி குண்டுகளில் சிக்கிய ஆயிரத்து 614 பேருக்கு செயற்கை அவயவங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 30

கடந்த பத்து ஆண்டுகளில் யாழ். மாவட்டத்தில் மிதிவெடி மற்றும் வெடிபொருள்களினால் பாதிக்கப்பட்டவர்களில் ஆயிரத்து 614 பேருக்கு செயற்கைக்கால்களும், கைகளும் பொருத்தப்பட்டுள்ளன.

மிதிவெடிகளில் பாதிக்கப்பட்டவர்களில் 80 வீதமானோர் கால்களை இழந்தவர்களாவார்கள். வெடிபொருள்களினால் வருடமொன்றுக்கு 80 பேர் காயமடைந்து வருகின்றனர் என்றும் இதில் 10 வீதமானோர் பலியாகின்றனர் என்றும் யாழ். பல்கலைக்கழக சமூக மருத்துவத்துறைத் தலைவர் டாக்டர் என். சிவராஜா தெரிவித்தார்.

1997 ஆம் ஆண்டு மே—டிசம்பர் மாதங்களுக்கிடையிலான எட்டுமாத காலத்தில் மட்டும் மிதிவெடிகளினாலும் வெடிபொருள்களினாலும் 81 பேர் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்களில் இருபது வீதமானோர் 20 வயதுக்குட்பட்டவர்கள் என்றும் அவர் கூறினார்.

## பேக்கரி ஊழியர் தீக்காயம்

யாழ்ப்பாணம், ஜூன்30

யாழ். நகரப்பகுதியிலுள்ள படைமுகாம் ஒன்றில் பேக்கரியில் பணியாற்றிய ஒருவர் தற்செயலாக ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கிப் பலத்த எரிகாயங்களுக்கு இலக்கானார்.

உடல் முழுவதும் எரிந்த நிலையில் நேற்று யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துவரப்பட்ட அவர் பின்னர் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக பலாலி இராணுவ ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டார்.

சோமபாலா (வயது26)என்ற பேக்கரி ஊழியரே காயமடைந்தவராவார்.

(ஐ-15-139)

## தொழில் நுட்பக் கல்லூரியில் வெற்றிடங்கள் நிரப்பப்படவில்லை

யாழ்ப்பாணம், ஜூன் 30

கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரியில் விரிவுரையாளர்களுக்கும், போதனாசிரியர்களுக்கும், சிற்றூழியர்களுக்கும் பற்றாக்குறை நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நிரந்தர விரிவுரையாளர்களாகத் தற்போது 21 விரிவுரையாளர்களே கடமையாற்றுகின்றனர்.

இதேவேளை பகுதிநேர விரிவுரையாளர்களாக 12 பேர் கடமையாற்றுகின்றனர்.

இக் கல்லூரியின் அதிபராக இருந்த எஸ். ஜெயரட்ணம் வடக்கு - கிழக்கு மாகாணத் தொழில் நுட்பக் கல்லூரிகளின் நாலகாவது வலயப் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றதைத் தொடர்ந்து தற்போது இங்கு அதிபர் பதவியும் வெற்றிடமாகவுள்ளது. (இ-7

## நல் வாழ்த்துக்கள்!

சாவகச்சேரி = டச் வீதி
ஸ்ரீ பழநி ஆண்டவர் ஆலய பரிபாலன சபைத் தலைவரும்,
சாவகச்சேரி நகர கிராம அலுவலருமாகிய

### திரு. வைத்திலிங்கம் இராசரத்தினம்
அவர்கள்

யாழ்ப்பாண மாவட்டத்தின் கிராம அலுவலர் சேவையில் தரம் II இல் இருந்து தரம் I க்கு திறமை அடிப்படையில் தரமுயர்த்தப்பட்டுள்ளமையையிட்டு அவர்களுக்கு எங்கள் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துப் பாராட்டுகின்றோம்.

இவ்வண்ணம்
ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம்,
ஸ்ரீ பழநி ஆண்டவர் ஆலய பரிபாலன சபை.
(சி/4144)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர்
திரு. ந. நாதன்
அவர்களது அன்புத் துணைவியார்

### ஜெயரூபி

அவர்கள் அகால மரணமடைந்தமை எமக்குப் பேரிழப்பாகும்; அன்னாருக்கு எமது இதய அஞ்சலிகள்!

வயாவிளான் ம. ம. வி., உரும்பிராய். அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், சிற்றூழியர்கள்.
(57248)

BOND பரீட்சைப்பகுதி
நடத்தும்
பயிற்சிப் பரீட்சை
G. C. E. [A/L] 98
02 - 07 - 98 இல் ஆரம்பமாகும்.
(நாடு முழுவதிலும்)
நேரசூசி அலுவலகத்தில் பெறலாம்.
BOND யாழ். நகர். (57219)

## சாவகச்சேரி சந்திர சேகர வாரி வனநாத சிவன் கோயில்
# தேர், தீர்த்த, பூங்காவன விஞ்ஞாபனம்

30-06-1998 செவ்வாய்க்கிழமை தேர்த் திருவிழா காலை 8-30 மணி
01-07-1998 புதன்கிழமை தீர்த்த உற்சவம் காலை 9-30 மணி
02-07-1998 வியாழக்கிழமை திருக்கல்யாணம் மாலை 3-30 மணி

விளம்பர உதவி:
ஸ்ரீ ஐயனார் வெதுப்பகம், சாவகச்சேரி.
தேர், தீர்த்த, பூங்காவன உபயகாரர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொந்தப் பாதுகாப்புக்காக வழங்கப்பட்ட

# துப்பாக்கிகளை மீள ஒப்படைக்குமாறு மாகாணசபைஉறுப்பினருக்கு பணிப்பு

பதவிக் காலம் முடிவடைந்த மாகாண சபைகளின் உறுப்பினர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட சகல துப்பாக்கிகளையும் உடனடியாகத் திருப்பிப் பெறுவது என அரசு முடிவு செய்துள்ளது.

மாகாண சபைகளைச் சேர்ந்த அமைச்சர்கள் உறுப்பினர்கள் தமது பாதுகாப்புக்கு வழங்கப்பட்ட சகல துப்பாக்கிகளையும் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் அருகில் உள்ள பொலீஸ் நிலையங்களில் ஒப்படைக்குமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆர். கே. சந்திரானந்த டி சில்வா உத்தரவிட்டுள்ளார்.

சம்பந்தப்பட்டோரிடம் இருந்து துப்பாக்கிகள்பெறப்பட்டதும் அதை நிரூபிப்பதற்கான பற்றுச் சீட்டுக்களைப் பொலீஸார் வழங்கவுள்ளனர்.

1988 ஆம் ஆண்டு முதல் நடைபெற்ற மாகாணசபைத் தேர்தல்களில் வெற்றிபெற்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் இந்தப் பணிப்புரை பொருந்தும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9-21)

# டிசம்பருக்கு முன் தேர்தல்களுக்கு பாதுகாப்பு வழங்க முடியாது!

## அமைச்சரவையிடம் அனுருத்த தெரிவிப்பு

எதிர்வரும் டிசம்பர் மாதத்துக்கு முன்பு எந்தவொரு தேர்தலுக்கும் பாதுகாப்பு வழங்க முடியாது.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தை கடைசியாக நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இவ்வாறு தெரிவித்ததாகக் கூறப்படுகின்றது.

புதிதாகப் பயிற்சி முடித்துக் கொண்டு ஒரு தொகுதி பொலீஸார் இவ்வருட இறுதியில் சேவைக்கு வருகின்றார்கள்.

இப்போதைய நிலையில் யுத்த முனையிலிருக்கும் பொலீஸாரையோ, படையினரையோ தேர்தல் கடமைகளுக்கு அழைக்க முடியாது.

'எனவே புதிதாகப் பயிற்சி முடித்து வெளியேறும் பொலீஸார் சேவைக்கு வந்ததும் அவர்களையே தேர்தல் கடமையில் ஈடுபடுத்தக் கூடியதாக இருக்கும்' — இவ்வாறு அமைச்சர் ரத்வத்த மேலும் கூறியதாகத் தெரிகின்றது.

இதற்கிடையில்—

மாகாணசபைத் தேர்தல்களுக்கான வேட்பு மனுக்கள் ஏற்பதற்கான திகதிகள் குறித்து அரசு அறிவித்துள்ளது என்றாலும் தேர்தல்கள் ஒத்திவைப்பது தொடர்பாகவும் அரசு ஆராய்கிறது.

★ அவசரகாலச்சட்ட விதிகளைப் பயன்படுத்துதல்.

★ மாகாணசபைத் தேர்தல்களில் சட்டம் திருத்தம் செய்தல்.

மேற்படி இரு வழிகளில் எந்த முறையில் தேர்தலை ஒத்தி வைக்க முடியும் என்பது குறித்து சட்டமா அதிபரின் ஆலோசனையை அரசு கோரியுள்ளதாகத் தெரிகின்றது. (உ-21-10)

ஜனாதிபதியின்..

(முதலாம் பக்கத் தொடர்)

பொலீஸார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருவதாகவும் கூறப்பட்டது.

இதே பாணியில் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் றொஹான் தலுவத்தவின் மகளையும் படுகொலை செய்யத் திட்டமிடப்பட்டிருந்ததாகவும் — அதனையும் பாதுகாப்புப் பிரிவினர் முறியடித்து விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9-10)

# அ. தி. மு. க. கூட்டணி பிளவுபடும் சாத்தியம்

கருணாநிதி தலைமையிலான தி. மு. க. அரசைப் பதவி நீக்கம் செய்யும் விடயம் தொடர்பான கொள்கை வேறுபாடுகள் காரணமாக அ. தி. மு. க. கூட்டணி பிளவுபடும் சூழ்நிலை உருவாகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

செல்வி ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க. கூட்டணியில் இடம் பெறும் முக்கிய கட்சியான மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வை. கோபாலசாமி தி.மு.க. அரசை பதவி நீக்கம் செய்வதைத் தமது கட்சி ஒரு போதும் ஆதரிக்காது என்று தொடர்ந்து கூறி வருகிறார்.

தி.மு.க. அரசை பதவி நீக்கும் விவகாரத்தால் அ.தி.மு.கவுக்கும் பாரதீப ஜனதாக் கட்சி அரசுக்கும் இடையே கருத்து மோதல் ஏற்பட்டதன் விளைவாக கடந்த சனியன்று புதுடில்லியில் நடைபெற்ற பாரதீய ஜனதாக் கட்சிக் கூட்டணி அரசில் இடம் பெறும் கட்சிகளின் ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா கலந்துகொள்ளவில்லை.

சுகயீனம் காரணமாகவே தாம் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை என ஜெயலலிதா தெரிவித்திருந்தார். ஆனால் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வை. கோபாலசாமி இக்கூட்டத்தில் கலந்து கொண்டார்.

தமிழக ராஜீவ் காங்கிரஸ் கட்சித் தலைவர் வாழப்பாடி கே, ராமமூர்த்தி கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.

கூட்டணிக் கட்சிகளுக்கு இடையிலான இந்த மாறுபட்ட நிலைப்பாடுகளால் உறவுகள் பாதிக்கப்பட்டிருப்பதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

# போலிநோட்டு அச்சிடுவது கண்டுபிடிப்பு

கொழும்பு புறக்கோட்டையில் இரு இடங்களில் போலி நோட்டுக்கள் தயாரிக்கப்படுவதை இரகசியப் பொலீஸார் நேற்றுக் கண்டுபிடித்ததாக அறிய வருகின்றது.

ஐந்நூறு ரூபா, ஆயிரம் ரூபா போலி நோட்டுக்கள் அச்சிடும் இயந்திரங்கள் மீட்கப்பட்டன. பதினாறு பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர். (உ-21)

யாழ். கூ. மொ. வி.யில்

# பாவனைக்கு உதவாக பெருமளவுஉணவுஅழிப்பு!

யாழ். கூட்டுறவு மொத்த விற்பனை நிலையக் களஞ்சியத்தில் இருந்த பாவனைக்கு உதவாத பெருமளவிலான உணவுப் பொருள்கள் அழிக்கப்படவுள்ளன.

இதற்கான பணிப்புரையை கூட்டுறவு மொத்த விற்பனவு தலைவர் எஸ். ரி. சந்திரதாஸ விடுத்துள்ளார்.

140 தொன் பச்சை அரிசி 10 தொன் கௌபி, 14 தொன் பயறு ஆகியன உட்பட மொத்தம் 54 லட்சம் ரூபா பெறுமதியான உணவுப் பொருள்கள் அழிக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார். (ஐ-21)

இலங்கை அமைதிக்காக

# சர்வதேச சத்தியசாயி நிலையங்களில் பஜனை

இலங்கையில் சாந்தியும் சமாதானமும் வேண்டி சர்வதேச சாயி நிலையங்களில் எதிர்வரும் 4 ஆம் திகதி சனிக்கிழமை சம காலத்தில் பஜனை மற்றும் கூட்டுப் பிரார்த்தனைகள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

லண்டன் வோல்தம்ஸ்ரோ நகரில் உள்ள பகவான் ஸ்ரீ சத்தியசாயிசேவா நிலையம் இந்தக் கூட்டுப் பிரார்த்தனையை ஒழுங்கு செய்துள்ளது.

உலகின் பல நாடுகளிலும் உள்ள சாயி சேவா நிலையங்களில் அன்றைய தினம் பஜனை, பிரார்த்தனைகள் இடம்பெறவுள்ளன.

திருநெல்வேலியில் உள்ள யாழ். பகவான் ஸ்ரீ சத்திய சாயி நிலையத்திலும் அன்று பிற்பகல் 3 மணிமுதல் 5மணி வரையும் பஜனை நடைபெறும்.

குடாநாட்டில் உள்ள ஏனைய சாயி நிலையங்களிலும் இத்தகைய பஜனை, கூட்டுப் பிரார்த்தனைகளை நடத்துமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

**BITSMANS**
கல்வி நிறுவனம்
மானிப்பாய்.
பிரிவு 3
O/L DAY CLASS
(எமது வழமையான ஆசிரிய குழுவினால்)
ஆரம்பம்:- 01-07-98 புதன் 8.00 மணி.
55446)

நிவாரண...

(முதலாம் பக்கத்தொடர்)

செந்தில்நந்தனனிடம் கையளிக்கப்பட்டது.

மனித நீதிக்கான போராட்டக் குழுவில் அங்கம் வகிக்கும் புளொட், ஈ. பி. ஆர். எல். எவ், ரெலோ, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியவற்றின் சார்பில் முறையே செ. கிருபைராஜா, த. சுபத்திரன், எஸ். சாந்தகுமார், பொன். மதிமுகராஜா ஆகியோர் அந்த மகஜரில் கையொப்பமிட்டிருந்தனர்.

# படையினரின்...

(முதலாம் பக்கத் தொடர்)

பின்னர் அப்பகுதியில் தேடுதல் நடத்திய படையினர் இந்தச் சடலத்தை மீட்டதாகவும் அது விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினருடையதாக இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுவதாகவும் பலாலி படைத் தலைமையகம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் சடலம் அடையாளம் காண்பதற்காகவும், பிரேத பரிசோதனைக்காகவும் ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டிருக்கிறது. (ஐ-15-139)

# வீரத்துடன்...

(முதலாம் பக்கத் தொடர்)

எமக்கு உள்ளது.

யாரையும் அச்சப்படுத்தும் அல்லது அச்சமுடன் சேவை செய்யும் எண்ணம் எமக்குக் கிடையாது. எல்லோருடனும் சமாதானம் அன்பு உணர்வுடன் பணிபுரியும் துணிவுடனும் உங்கள் உதவியுடனும் மாநகரின் வளர்ச்சிக்கான பணிகளை மேற்கொள்வேன்.

நான் கொழும்பில் அரச கூட்டுத்தாபனம் ஒன்றில் பணிபுரிந்து சம்பளம் பெறுவதாகவும் வேறு சிலரின் பலவந்தத்தின் பேரில் பதவி ஏற்க முன்வந்ததாகவும் சில பத்திரிகைச் செய்திகள்வெளியாகின. இது முற்றிலும் தவறாகும்.

இது ஓர் இருண்ட காலம். அதற்கு ஒரு விளக்குக் குப்பியை ஏந்தி வெளிச்சத்தின் ஊடாக அனைவரையும் அழைத்துச் செல்ல வேண்டும் என்பதே எங்கள் குறிக்கோள். நாங்கள் ஜனநாயகப்பாதையில் செல்பவர்கள். காந்தியடிகள், நபிகள் நாயகம், யேசுநாதர், புத்தர் போன்றோர் காட்டிய வழி ஜனநாயக வழி.

அந்த வழியில் — சமுதாயத்தை அன்பான பாதையில் இட்டுச் செல்ல விரும்புகின்றேன். எனது பணி அன்புக்கோ சமாதானத்திற்கோ நீதிக்கோ சவாலாக இல்லாமல் மக்கள் பணியாக இருக்க வேண்டும்.

நாங்கள் வீடற்றவர்கள், நாடற்றவர்கள் என்ற நிலை இங்கே தெரிகிறது. மாநகர சபைக்கென்று கட்டடம் இல்லை. இத்தகைய சூழலில் அன்புடன் பணியாற்றுவோம்; அன்போடு செயற்படுவோம்; அன்போடு வாழ்வோம்; அன்பாலே வெல்வோம்- - என்றார்

(உ-5-6-103-173)

வெளிநாட்டு / உள்நாட்டு
துரித தபால் சேவை
ஜிலானி முகவர் தபால் நிலையம் T.N.T. COURIER நிறுவனத்துடன் இணைந்து நடத்தும் TNT. துரித தபால் சேவையை யாழ்ப்பாணத்திலும் ஆரம்பித்துள்ளது என்பதை மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.
இதன் மூலம்—
உள்நாட்டு, வெளிநாட்டு
தபால்கள் / ஆவணங்கள்
என்பன மிக விரைவாக அனுப்பிவைக்கப்படும்.
தபால்கள் பெற்றுக்கொள்ளும் இடங்கள்:
ஜிலானி முகவர் தபால் நிலையம்
இல. 12, பஸ் நிலையம், யாழ்ப்பாணம்,
குமரன் விடுதி
ஜிலானி முகவர் தபால் நிலையம்
இல, 67, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(சி/4135)

# யாழ். புதிய...

(முதலாம் பக்கத் தொடர்)

யினர் பாதுகாப்பு வழங்கினர்.

பிற்பகல் 1. 00 மணியளவில்புதிய மேயர் பொன். சிவபாலன், தமிழர் விடுதலைக் கூட்டணியின் உப-தலைவர் வீ. ஆனந்தசங்கரி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து பதவியேற்றார். யாழ். மாநகர ஆணையாளர் வி. பி. பாலசிங்கமும், யாழ். புதிய மேயரின் துணைவியார் திருமதி சிவபாலனும் உடனிருந்தனர்.

மாநகர சபையில் மேயரின் அலுவலக அறையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஏனைய மாநகர சபை உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் உட்பட சொற்ப தொகையினர் சமுகமளித்திருந்தனர்.

மேயரின் பதவியேற்பை அடுத்து கலந்துரையாடல் ஒன்று அங்கு இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து பிற்பகல் 3 மணியளவில் மாநகர சபை கூட்ட மண்டபத்தில் மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம் நடைபெற்றது.

[illegible] புதிதாகப் பதவியேற்ற மேயர், பிரதி மேயர், உறுப்பினர்கள் உட்பட ஒன்பது உறுப்பினர்களும், புளொட்டின் ஆறு உறுப்பினர்களில் மூவரும், ஈ. பி. டி. பியின் ஆறு உறுப்பினர்களில் இருவரும், ஈ. பி. ஆர். எல். எவ்வின் இரு உறுப்பினர்களுமாக மொத்தம் இருபத்திமூன்று உறுப்பினர்களில் பதினாறு பேர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

ஈ. பி. டி. பியின் உறுப்பினர்கள் யாழ். மாநகரசபைக் கூட்டத்தில் பங்கு பற்றுவது இதுவே முதல் தடவை. அக்கட்சியின் சார்பில் நேற்றைய கூட்டத்தில் பங்கு பற்றிய இரு உறுப்பினர்களுள் ஒருவர் முஸ்லிமாவார்.

மாநகர சபை கூட்ட வேளையில் அப்பகுதிக்குள் செல்வதற்கு வெளியார் எவரும்அனுமதிக்கப்படவில்லை. கூட்டம் ஆரம்பமானதும் மாநகர சபை மண்டபக் கதவுகள் இழுத்து மூடப்பட்டன. கூட்டத்திற்கு வந்திருந்த அனைவரும் படையினரால் வீடியோ படம் எடுக்கப்பட்டனர்.

(உ-5-6-103-173-139)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 861 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30-06-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org